விலை: 60.00
பக்கங்கள் : 20

website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka


விரைவு பொதிகள் சேவை
DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள்
சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.
திருமுருகன் கொம்நெற்
பணியாளர் தேவை
321, K.K.S Road, Jaffna.
077 755 4528
(512)

# வலம்புரி சங்குநாதம்

சங்கு 26
ஒலி 017 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 21 ஞாயிற்றுக்கிழமை (05.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட்டே ஆக வேண்டும்

### சிறீதரன் எம்.பி ஆணித்தரம்



(கிளிநொச்சி)

தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்னவென்பது குறித்து தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் கொள்கை ரீதியில் பொதுநிலைப்பாடொன்றுக்கு வர வேண்டியது அவசியம் என வலியுறுத்தியுள்ள 19

## அரிசி இறக்குமதி செய்ய 10ஆம் திகதி வரை அவகாசம்

### அரசாங்கம் திட்டவட்டம்

(கொழும்பு)

அரிசி இறக்குமதி செய்வதற்கான கால அவகாசத்தை மீண்டும் நீடிக்கப் போவதில்லை என வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 10ஆம் திகதிக்குப் பின்னர் வர்த்தகர்களால் அரிசி இறக்குமதி செய்யப்பட்டால் அவை மீண்டும் திருப்பி அனுப்பப்படும் 19

## தமிழ்ப் பொலிஸாரிடமிருந்து சேவையைப் பெற முடியாதுள்ளது

### தமிழ்ப் பொது அமைப்புகள் அறிக்கை

*(யாழ்ப்பாணம்)*

**தமிழ்ப் பொலிஸாரிடம் இருந்து வினைத்திறன்மிக்க சேவையைப் பெறமுடியாதுள்ளதாகத் தமிழ்ப் பொது அமைப்புகள் அறிக்கையிட்டுள்ளன.**

தமிழர் பிரதேசங்களில் தமிழ்ப் பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை இருந்தபோதிலும் தமிழ்ப் பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் இருக்கக்கூடிய தமிழ்ப் பொலிஸார், தீர்மானம் எடுக்க முடியாதவர்களாகவும் பதவி நிலையில் அவர்கள் உயர் அதிகாரிகளுக்குப் பயந்து செயற்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

பொதுவில் பொலிஸ் நிலையங்களில் பொறுப்பதிகாரிப் பதவிகளில் தமிழ்ப் பொலிஸார் இல்லாத நிலைமையும் தமிழ்ப் பொலிஸாரின் சேவையை சிங்களப் பொலிஸ் அதிகாரிகள் அசமந்தம் செய்கின்ற நிலைமையும் காணப்படுவதாகவும் குறித்த தமிழ்ப் பொது அமைப்புகள் அறிக்கையிட்டுள்ளன.

இதேவேளை தமிழ்ப் பொலிஸார் சிங்களத்தில் உரையாடுவதிலேயே ஆர்வமாக இருப்பதாகவும் தங்களைத் தமிழர் என்று இனங்காட்டாமல் இருப்பதில் அவர்கள் கருசனை கொண்டுள்ளதாகவும் குறித்த பொது அமைப்புகளின் அவதானக் குறிப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ந-7)

## மாமனிதர் குமாரின் 25ஆவது நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25ஆவது நினைவேந்தல் நிகழ்வானது இன்று (05.01.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது. (ந)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## விடைத்தாள் திருத்தம் 8ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள்களைத் திருத்தும் பணிகள் இம்மாதம் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பரீட்சை வினாத்தாள்களைத் திருத்தும் பணிகள் ஜனவரி 12 ஆம் திகதி வரை நடைபெறும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-7)

## வடக்கில் - இந்தியா கிழக்கில் - ரஷ்யா

### தூதர்கள் ஆளுநர்களுடன் திடீர் சந்திப்பு



19

## தாண்டவமாடுகிறது மருந்துத் தட்டுப்பாடு நிதியுதவிகளை ஏற்க மறுக்கிறார் அமைச்சர்

### தயாசிறி ஜயசேகர எம்.பி காட்டம்

(கொழும்பு)

சுகாதார அமைச்சுக்கு அளவுக்கதிகமாக நிதி ஒதுக்கப்படுவதாகவும், அதனால் தமக்கு நிதி உதவிகள் தேவையில்லை என்றும் கூறும் சுகாதார அமைச்சரிடம் மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கான தீர்வு இருக்கிறதா? இவ்வாறான மமதைப் பேச்சுக்களால் மக்களுக்குக் கிடைக்கவிருக்கும் நன்மைகளையும் இழக்க வேண்டியேற்படும் எனப்பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எச்சரித்துள்ளார்.

குருநாகலில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கையில் முதலாவது எலும்பு மச்ஜை பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மிகவும் மகிழ்ச் 19

## யாழிலுள்ள மதுபானசாலையில் வன்முறைக் கும்பல் அடாவடி

### விசாரணையை துரிதப்படுத்திய பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள மதுபானசாலையொன்றுக்குள் கடந்த 31ஆம் திகதி நுழைந்த குழுவொன்று வன்முறையில் ஈடுபட்டிருந்ததோடு அங்கிருந்தவர்கள் மீதும் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியிருந்த நிலையில் அது தொடர்பிலான சி.சி.ரி.வி காட்சிகள் நேற்று வெளியாகின.

யாழ்.நகரப் பகுதியிலுள்ள மதுபானசாலையிலேயே குறித்த சம்பவம் அரங்கேறியுள்ளதாகத் தெரிவித்த யாழ்ப்பாணப் பொலிஸார், இது குறித்து தாம் 19

## மின்சார கட்டணத்தை குறைக்க கோரிக்கை

(கொழும்பு)

மின்சார சபை இலாபமடைந்துள்ள நிலையில் இம்முறை மின் கட்டணத்தை குறைந்தபட்சம் 25 19

## நாட்டில் நீடிக்கும் துப்பாக்கிக் கலாசாரம்

### நேற்றும் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் நேற்றும் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

வெலிகம - தப்பரதோட்ட - வள்ளிவெல வீதியில் நடந்து சென்ற ஐவர் மீது 3 உந்துருளிகளில் பயணித்த அடையாளம் தெரியாத குழுவினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டிலேயே 26 வயதுடைய 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN
GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.
Practical to UKVI on Computer
(வாழ்க்கை துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam } புதிய பிரிவுகள் ஆரம்பம்
IELTS
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
T.P : 077 780 3970, 074 007 1970
(2907)

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.
198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)
077 138 7596, 071 999 9306
(2921)

## PickMe யாழ்ப்பாணத்தில்

நீங்கள் வைத்திருக்கும் CAR/ VAN/ Lorry/ Motorcycle அனைத்தையும் PickMe Taxi சேவையில் இலவசமாக இணைத்து அதிக வருமானம் பெறலாம்.
077 473 7737
அழைக்கவும்.
(2933)

## நயினை அம்மன் Real estate
## தேவை

யாழ்ப்பாணத்தில் 2 கோடி ரூபாவுக்கு உட்பட்ட விலையில் வீடு, காணி உடனடியாகத் தேவை. மற்றும் கணனி அறிவுடைய வர்கள் வேலைக்குத் தேவை.
076 050 3863, 076 311 9485
(2930)

## British College of Higher Studies

BCHS
NEW BATCHES START!!
IELTS
Academic / General
Life skills
- Diploma In English
- Spoken English
- Spoken Sinhala

Speaking / Reading / Writing/ listening
Week days & weekend days
15, Sirambiyady lane, Stanley Road, Jaffna.
021 222 4550 / 076 138 0212





## CANADA VISA

- 100% உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.
- Swiss Visa
- France Visa
- German Visa
- Norway Visa
- அனைத்து நாடுகளுக்குமான விசா சேவைகள் மிகக் குறைந்த செலவில்

Exponet Overseas consultant
No-125, Arasady Road, Jaffna.
071 415 0995
021 435 5113
(2931)

## நம்பினால் நம்புங்கள்

அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.
காயத்திரி திருமண சேவை
கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக
ரூபி விலாஸ்
075 353 1367, 077 844 9861
(2927)


# மரண அறிவித்தல்



பிறப்பு 19 - 09 - 1943

இறப்பு 03 - 01 - 2025

## பொன்னம்பலம் விஜயலட்சுமி

ஆனையிறவைப் பிறப்பிடமாகவும் சுதந்திரபுரம் சந்தி, உடையார்கட்டினை(லக்ஷ்மி அக்கடமி) வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் விஜயலட்சுமி அவர்கள் 03.01.2025 அன்று எல்லாம் வல்லவனின் பாதக்கமலங்களினை சரணடைந்தார்.

அன்னார் வல்லிபுரம் பொன்னம்பலத்தின்(ஓய்வு நிலை தபால் உத்தியோகத்தர்) அன்புத் துணைவியும் அமரர் மார்க்கண்டு(ஓய்வு நிலை கிராம உத்தியோகத்தர்) - நாகம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் அமரர் வல்லிபுரம் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் திருநாவுக்கரசு, தனலட்சுமி, அமரர் சண்முகலிங்கம் மற்றும் பஞ்சலிங்கம், ஆனந்தலட்சுமி, மோட்சலிங்கம், யோகலட்சுமி, பாஸ்கரலிங்கம், திருநாமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் சுப்பையா, இராசையா, தம்பிராசா, சின்னத்துரை, கந்தசாமி மற்றும் கணேசம்மா, அமரர் கந்தசாமி மற்றும் சந்திரராணி, கேதீஸ்வரி, நடராசா, லதா, இந்திரபாலன், பிறேமா, சந்திரவதனி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பொன்மலர்(இத்தாலி, முன்னாள் பரந்தன் இந்து மகா வித்தியாலய ஆசிரியர்), பொன்மதி(லண்டன்), தயாபரன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - பிரதேச சபை, கரைத்துறைப்பற்று), சர்மிளா(ஆசிரியை - கிளிநொச்சி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் அமரர் புஸ்பகரன் மற்றும் ஜோசப் ஹென்றி, ஜசீதா(ஆசிரியை - வள்ளிபுனம் மகா வித்தியாலயம்), சிறீரூபன்(அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலம், கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மிதுஷா(லண்டன்), சீதுஷா(இத்தாலி), தர்சா - கபிலன் (இந்தியா), யாசரன், பிராந்தகன், சைந்தவி, தீசிதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வியன்னாவின் ஆசைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.01.2025 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெள்ளப்பள்ளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

லக்ஷ்மி அக்கடமி,
சுதந்திரபுரம்.

தகவல் :
குடும்பத்தினர்

(C-1953)


## மலிவு விலையில்

பாடசாலை மாணவர்களுக்கான (SOCKS) காலுறைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை நலன்புரிச் சங்கங்களுக்கு விஷேட கழிவு வழங்கப்படும்.
076 315 6470
(C-1952)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


# மரண அறிவித்தல்



மலர்வு 28 - 08 - 1959

உதிர்வு 30 - 12 - 2024

## கணபதிப்பிள்ளை தவராஜா [தவம்]

குப்பிழானைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி எசன், லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தவராஜா அவர்கள் 30.12.2024 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற புலவர் விசாலாட்சி (மாதாஜி) அவர்களின் பெறாமகனும் காலஞ்சென்ற செபமாலை சின்னத்தங்கம் (இருபாலை) ஆகியோரின் பாசமிகு மருமகனும் ரஞ்சினியின் அன்புக் கணவரும் கார்லன், அங்குசன், அருட்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அபிராமியின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற விக்னேஸ்வரி மற்றும் நந்தினி (ஜேர்மனி), தேவராஜா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமுதலிங்கம், அருள்ராஜன், ரவீந்திரராஜன், சுகுணராஜன், ராஜரூபா, ராஜசேகர் காலஞ்சென்றவர்களான ரஜிந்தினி (பவா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் காலஞ்சென்ற கந்தசாமி, யோகேஸ்வரன் மற்றும் ராகுலன், குகேசன், விஜயஸ்ரீ, இந்திரா, கேந்திராதேவி, சுந்தரலட்சுமி, மகாலட்சுமி, மீனலோஜினி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் Hendon Cemetery & Crematorium Holders Hill Road London NW71NB நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
மதுரம் கிருபா
கோப்பாய் தெற்கு.

0773122918

(2920)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


❖ வித்தியாசமான ஒலி எழுப்பிகள்
❖ பலநிற ஒளியூட்டிகள்

# மோட்டார் வாகனங்களில் பொருத்தத் தடை!

## கடுமையாக்கப்படும் சட்டம்

(கொழும்பு)

**மோட்டார் வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள தேவையற்ற உபகரணங்கள் தொடர்பான சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**



இது தொடர்பில் அவதானம் செலுத்தி சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமாறு பதில் பொலிஸ் மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கமைய பல்வேறு நிறங்களில் மின்விளக்குகள் மற்றும் பல்வேறு தொனிகள் கொண்ட ஹோர்ன்களை பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் தேவையற்ற உப கரணங்களைப் பொருத்தியுள்ள வாகனங்கள் தொடர்பில் சட்டத்தை கடுமையாக நடை முறைப்படுத்து மாறு பதில் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். (நி)

## எரிவாயு விலையில் மாற்றமில்லை

(கொழும்பு)

ஜனவரி மாதம் உள்நாட்டு எரிவாயு விலையை அதிகரிப்பதில்லை எனத் தீர்மானித்துள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது 12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை ரூ.3,690 ஆகவும், 5 கிலோகிராம் கொண்ட காஸ் சிலிண்டரின் விலை ரூ.1,482 ஆகவும் உள்ளது.

மேலும் 2.3 கிலோ எடையுள்ள எரிவாயு சிலிண்டரின் விலை 694 ரூபாவாகும்.

இதேவேளை இந்த மாதம் லாஃப் எரிவாயு விலை திருத்தம் தொடர்பான முடிவை எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் வழங்க முடியும் என லாஃப் எரிவாயு நிறுவனமும் நேற்று அறிவித்தது.

அதன்போது எரிவாயு விலை தற்போதைய விலை மட்டத்திலேயே தொடர அதிக வாய்ப்புகள் இருப்பதாக நிறுவனம் தெரிவித்திருந்தது.

இதன்படி விலையை உயர்த்த வேண்டிய தேவை இல்லை என்றும் லாஃப் நிறுவனம் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சீனி உற்பத்தியினை அதிகரிப்பதில் அரசாங்கம் விசேட கவனம்



(கொழும்பு)

நாட்டில் சீனி உற்பத்தியினை அதிகரிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெல்வத்த மற்றும் செவனகல சீனி தொழிற்சாலைகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த தொழிற்சாலைகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் சீனியை முறையாக விநியோகிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகக் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார். (நி)

உ
சிவமயம்
55ஆம் நாள், 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும்





அமரர்
இராசையா
சுந்தரலிங்கம்

அமரர்
இராசையா
இராஜேஸ்வரி

கடந்த 13.11.2024 புதன்கிழமையும் 07.12.2024 சனிக்கிழமையும் சிவபதம் அடைந்த எமது அன்புச் சகோதர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 03.01.2025 காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் நடைபெற்று, வீட்டுக்கிருத்திய கிரியைகள் 04.01.2025 சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற்றது. இன்று 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை இராமநாதன் வீதியில் அமைந்துள்ள **சரஸ்வதி மண்டபத்தில்** நடைபெறும் மதியபோசன நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அமரர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

ஈரவிழிகளுடன் எம் அன்புச் சகோதரர்களுக்கு எம் இதயம் நெகிழ்ந்த கண்ணீர்க் காணிக்கை

இல.09.இராமநாதன் வீதி, கலட்டி,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்
(510)

நான்காம் ஆண்டு
நினைவஞ்சலி

தோற்றம்
17.10.1949



மறைவு
20.12.2020

அமரர். சோமசுந்தரம் புவனசுந்தரம்

(திதி-சஷ்டி)

ஆலமரமொன்று அடிசாய்ந்ததோ-வேரோடி
விழுது விட்டபெரு விருட்சமே எமை-பாரோடு
தவிக்கவிட்டு பாதியிலே போனதேனோ
நான்காண்டுகள் நகர்ந்துவிட்டன
எங்கள் உயிர்மூச்சு உள்ளவரை
உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டுப் பிரியாது அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

(சி-195)

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

★ யாழ். வைத்தியசாலை வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 03 கடை முகப்புடன் 09 பரப்புக் காணியும்
★ யாழ். மின்சார நிலைய வீதியில் CTB தரிப்பிடத்திற்கு பின்பாக நர்மதா நகைக் கடைக்கும் மலாயன் கடைக்கும் இடையில் 04 கடைகளும்
★ யாழ். கஸ்தூரியார் வீதியில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அண்மையில் 04 பரப்பு மற்றும் 03 பரப்புக் காணியும்
★ யாழ். மின்சார நிலைய வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 1 ½ பரப்புக் காணியும்
★ யாழ். வைமன் வீதியில் 1 ½ பரப்புக் காணியும்
★ யாழ். பிறவுண் வீதியில் 06 பரப்பு, 14 பரப்பு மற்றும் 02 பரப்புக் காணியும்
★ யாழ். கந்தர்மடச் சந்திக்கு அண்மையில் 03 பரப்புக் காணியும் (C-1956)
★ யாழ். வெலிங்டன் சந்திக்கு அண்மையில் 1 ½ பரப்பில் அமைந்த 03 மாடிக் கடையும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 723 2535

## முதியோர் இயல்பு வாழ்வு இல்லம்

எமது பாசமிகு பெற்றோர் உரிய பராமரிப்பின்றி அவதிப்படுகிறார்களா...

நீங்களும் நாடலாம்...

- சகல வசதிகளுடனும் கூடிய தனியறை வசதிகள்
- அன்பான உறவுகளின் பராமரிப்பு
- ஆரோக்கியமான சைவ, அசைவ உணவுகள்
- வைத்திய சேவைகள்
- 24 மணிநேர தாதியர் கண்காணிப்பு
- எந்நேரமும் உறவுகளுடன் உரையாடும் வசதி
- விரும்பிய நேரம் வெளியில் சென்றுவருதல்
- நடைப்பயிற்சி மற்றும் பொழுதுபோக்குகள்
- அமைதியான ஆன்மீகச் சூழல்



மேலும் பல வசதிகளுடன் வீட்டில் இருப்பது போன்ற இயல்பான வாழ்வினைப்பெற விரும்புபவர்களுக்கு.

(C-1957) "முதியோர் இயல்பு வாழ்வு இல்லம்"

தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை
K.K.S வீதி, தெல்லிப்பளை.
(தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம் முன்பாக)

077 0709617
077 2380196

A/L பரீட்சையின் பின்னர்....

யாழ்ப்பாணம், நெல்லியடி, வவுனியா, கிளிநொச்சி மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மற்றும் மன்னாரிலும்..

**Diploma in Spoken English**

- முழுநேர / பகுதி நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றது.
- மாணவர்கள் சரளமாக ஆங்கிலம் பேசுவதற்கும், Listening, Reading & Writing இல் தேர்ச்சியடைவதற்கும் 100% உத்தரவாதம்.
- மாணவர்களின் ஆங்கிலறிவுற்கேற்ப பாடநெறிகள் Basic, Intermediate & Advanced எனத் தனியாக நடைபெறும். (513)

BRITISH COLLEGE Of Education
More information 0777- 695605
23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113

| | |
|---|---|
| Nelliyady. Tel : 021-7284200 | Batticaloa. Tel : 011-4802486 |
| Kilinochchi. Tel : 021-4927114 | Trincomalee. Tel : 011-4809245 |
| Vavuniya. Tel : 024 -4930041 | Kalmunai. Tel : 067-4300207 |
| Vavuniya 2nd Tel : 024-4930042 | Mullaithivu. Tel : 021-7284344 |
| Puthukkudiyiruppu. Tel : 021-2290933 | Mannar. Tel : 021-4332294 |

IDP IELTS. Ukvi Exam centre

யாழ்ப்பாணம், நெல்லியடி, வவுனியா, கிளிநொச்சி மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மற்றும் மன்னாரிலும்..

மேற்கத்தைய நாடுகளில் கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற (513)

**IELTS** Academic / General / Ukvi

- மாணவர்கள் 6.5 band Score பெறுவதற்கு 100% உத்தரவாதம்.

- IELTS, IELTS Ukvi பரீட்சைகள் British College இல் நடைபெறும்.
- முழுநேர வகுப்புக்கள் மற்றும் பகுதி நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றது.

BRITISH COLLEGE Of Education
More information 0777- 695605
23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113

| | |
|---|---|
| Nelliyady. Tel : 021-7284200 | Batticaloa. Tel : 011-4802486 |
| Kilinochchi. Tel : 021-4927114 | Trincomalee. Tel : 011-4809245 |
| Vavuniya. Tel : 024 -4930041 | Kalmunai. Tel : 067-4300207 |
| Vavuniya 2nd Tel : 024-4930042 | Mullaithivu.. Tel : 021-7284344 |
| Puthukkudiyiruppu. Tel : 021-2290933 | Mannar. Tel : 021-4332294 |

IDP IELTS, Ukvi Exam centre

## Online வகுப்புகள்

6 - 11 வரையான வகுப்பு மாணவர்களிற்கு ஒன்லைன் மூலம் கணித பாடம் கற்பிக்கப்படும். பயிற்சிகளில் தாமாகவே ஈடுபடும் முகமாக போதியளவு நேரம் வழங்கப்படும். பதிவுகள் மற்றும் விசாரணைகள் 05.01.2025 மாலை 6.00 மணி தொடக்கம் நடைபெறும்.

Contact us for online English Literature For (O/L)
Get personalized attention and flexible timmings (2928)

தொடர்புகளுக்கு:
(Whatsapp) 075 955 9721, 074 006 6959


## பலத்த காற்று

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட சில பகுதிகளில் மணித்தியாலத்துக்கு 30-40 கிலோமீற்றர் வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.


வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அறிவிப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஊவா மாகாணத்தில் சிறிதளவு மழை பெய்யும்.

அதேவேளை, மேல, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பிற்பகல் அல்லது இரவு வேளையில் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

சில இடங்களில் சுமார் 100 மில்லிமீற்றர் கனமழை பெய்யக்கூடும்எனவும்வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.(ந-7)

# மரண அறிவித்தல்



## சிவனடியார் செல்வவிநாயகம்

பருத்தித்துறை அரசடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவனடியார் செல்வவிநாயகம் அவர்கள் 03.01.2025 வெள்ளிக்கிழமை அன்று இறையடி ஏகினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவனடியார் - சகுந்தலா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான திலகவதி, பாலசுப்பிரமணியம் மற்றும் புனிதவதி(கனடா), மருங்கவதி(இலங்கை) அவர்களின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான நாகராஜா, தங்கவடிவேல், சரசா, சிவம் அவர்களின் அன்பு மைத்துனரும் வத்சலா, புஸ்பராஜா, கௌசலா, மஞ்சுளா, மாலா, சிவராஜா, வரதராஜா, வாசுகி, விவேகானந்தன், வரலஷ்மி, சீத்தாராம், சியாமளா, ராஜாராம், சர்மிளா ஆகியோரின் அன்புத் தாய்மாமனும் ஜெயந்தன், அனுஷியா, யசோதரா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 09:00 மணியளவில் தும்பளை கிழக்கு(மணியகாரன் சந்தி) பருத்தித்துறையில் இடம் பெற்று பூதவுடல் கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகள்:
மருங்கவதி(ராசாத்தி) - 076 019 5375
கௌசலா - 077 764 1255
மஞ்சுளா - 076 849 0329
சர்மிளா - 077 195 3343

(C-1954)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்தம் விசர்நாய்க்கடியால்

# 3 லட்சம் பேர் பாதிப்பு

## பொதுசுகாதார கால்நடை வைத்திய சேவை தகவல்

**(கொழும்பு)**

**ஆண்டுக்கு சுமார் 3 இலட்சம் நாய் கடி சம்பவங்கள் பதிவாகி வருவதாக பொது சுகாதார கால்நடை வைத்திய சேவை தெரிவித்துள்ளது.**



இதில் கடந்த ஆண்டில் மட்டும் சுமார் இரண்டு இலட்சம் மனித விசர்நாய்க் கடி தடுப்பூசிகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப் பட்டுள்ளது.

கடந்த வருடம் 20 பேர் உயிரிழந்துள்ளதாக பொதுச் சுகாதார கால்நடை வைத்திய அதிகாரி வைத்தியர் யேஷான் குருகே தெரிவித்துள்ளார்.

இதில் நடுத்தர வயதுடையவர்கள் அதிகமாக விலங்குக் கடிக்கு உள்ளாவதாகவும் அவர்களில் 2 பேரில் ஒருவர் ஆண்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், நாய்க்கடி அதிகமாகப் பதிவாகியிருந்தாலும் கடந்த பத்து வருடங்களில் படிப்படியாகக் குறைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் விசர் நாய்க்கடி தடுப்பூசிகளுக்காக வருடாந்தம் 600 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணம் செலவிடப்படுவதாக வைத்தியர் யேஷான் குருகே தெரிவித்துள்ளார். (நி)

# போதனாசிரியர்களிற்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ்.மாவட்ட தொழிற்பயிற்சி நிலையங்களில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியலாளர், கணினி படவடிமைப்பாளர், கணனி வன்பொருள் திருத்துநர் போன்ற கற்கைநெறிகளிற்கான போதனாசிரியர்கள் (நாளாந்த அடிப்படை) வெற்றிடங்களிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த (சாதரண தர) தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் NVQ-4 உடன் NVQ-5 அல்லது அதற்கு மேல் தொழில் தகைமை சான்றிதழ், சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வருடத்திற்கு மேலான கற்பித்தல் அனுபவம் ஆகிய தகைமைகளுடைய ஆர்வமுடையவர்கள் தங்கள் சுய விபரக்கோவை மற்றும் கல்வி, தொழிற்கல்வி, அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் பிரதிப்பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, 4 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் அல்லது நேரில் சமர்பிக்கவும். மேலதிக விபரங்களிற்கு 021 222 7949, 071 031 8737 இற்கு தொடர்பு கொள்ளுமாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் பிரதிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (நி)


பிறந்தநாள் வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்



Best Wishes

திரு. இராமசாமி நந்தகுமார்

நந்தி என்றால் ஆனந்தம் - எங்கள்
நந்தன் அண்ணையுடன்
இருந்தால் - எமக்கு
மகிழ்ச்சிதான்.
நந்தியின் வேலை தடுப்பது - எமது
நந்தன் அண்ணாச்சி - எம்
கல்லூரிக்கு வரும் ஆபத்துகளை
தடுத்து நிறுத்துவார்.
எளிமை நேர்மை உண்மை என
வாழ்ந்து காட்டிய நண்பன்.

பணி நிறைவு நாள்.
பணிக்கு மட்டுமே - எம்
பாசத்துக்கு அல்ல

வாழ்வாங்கு வாழ
வாழ்த்துக்கள்.

வாழ்த்துவோர் :
நண்பர்கள்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி.



புளோரன்ஸ் நேர்சிங் முதியோர் பராமரிப்பு இல்லம்



எங்களுடைய சேவைகள்

- நீண்ட கால படுக்கை நோயாளிகளை சுத்தமாக பராமரித்தல்.
- அங்கம் இழந்தவர்களை அன்பாக பராமரித்தல்.
- தனிமையில் மன அழுத்தத்தில் வாழ்பவர்களை பராமரித்தல்.
- உங்களுடைய தொழில் மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாக பெற்றோரை கவனிக்க முடியாதவர்கள் எங்களிடம் அனுமதியுங்கள்.
- விடுமுறைக்காக வெளியூர் செல்பவர்கள் நாட்கள் அடிப்படையிலும் வார அடிப்படையிலும் எம்மிடம் விட்டுச் செல்லலாம்.

(சி-1948)

மிகவும் குறைவான கட்டணத்தில் நிறைவான சேவைகள்

தொடர்புகளுக்கு
077 718 6438 / 077 482 4473
கந்தரோடை சுன்னாகம் (வைரவர் அம்மன் கோவிலடி)



மணமகள் தேவை

1996, இந்து, அனுசம், PROCESS TECHNOLOGIST
பூர்வீகம் - யாழ்ப்பாணம், வதியுமிடம் - LONDON
மணமகன் பதிவு இல: 11350.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(சி-024)
www.EQMarriageService.com



மணமகன் தேவை

1999, இந்து, உத்தரட்டாதி, SOFTWARE ENGINEER
பூர்வீகம் - துன்னாலை, வதியுமிடம் - பருத்தித்துறை
மணமகள் பதிவு இல: 11355.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(சி-024)
www.EQMarriageService.com



லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(2917)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615671 9

Western Union WU MoneyGram. Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திசாந் ஞாபகார்த்த கிண்ணத்தை கைப்பற்றியது கொற்றாவத்தை றேஞ்சஸ்




திசாந் ஞாபகார்த்தமாக கிண்ணத்தை கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி கைப்பற்றி 2025 ஆம் ஆண்டுக்கான முதலாவது சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர்.

திசாந் ஞாபகார்த்தமாக திசாந் நற்பணி மன்றத்தினரால் 23 வயதிற்கு உட்பட்ட வடமராட்சி இளையோர் அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்ட தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர். இருப்பினும் 13 ஆவது நிமிடத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணிக்கு நேர் உதை கிடைத்தது.

இதனை அவ்வணி வீரர் சுயாஸ் அடிக்க, அப்பந்து கோல் கம்பத்தில் பட்டு கோலாக மாற முதல் பாதியாட்டத்தில் றேஞ்சஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இரண்டாவது பாதியாட்டத்திலும் ஆட்டத்தின் வேகம் இரட்டிப்பாகியது. இதில் நவிண்டில் கலைமதி அணி வீரர்களுக்கு பல வாய்ப்புகள் கிடைத்த போதிலும் கோலாக்க தவறி விட்டனர். ஆனால் ஆட்டத்தின் 38 ஆவது நிமிடத்தில் றேஞ்சஸ் அணி வீரர் சர்மிலன் சிறப்பான கோலைப் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் றேஞ்சஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.


ஆட்ட நாயகனாக றேஞ்சஸ் அணி வீரர் கிருஷிகன், தொடர் ஆட்ட நாயகனாக றேஞ்சஸ் அணி வீரர் சர்மிலன், சிறந்த பின்கள வீரராக கலைமதி அணி வீரர், வினோத், சிறந்த கோல் கீப்பராக றேஞ்சஸ் அணி வீரர் ஆர்நிகன், வளர்ந்து வரும் வீரராக கலைமதி அணி வீரர் சாருஜன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (நி-90)

# நல்லூர் சிவன்கோவில் மஹோற்சவம் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் சிவன் கோவில் என அழைக்கப்படும் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதசுவாமி தேவஸ்தான மஹோற்சவம் நேற்றுக் காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து எதிர் வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும், 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (நி-33)





'நிலைபேறான நிலவள முகாமைத்துவம்' இயற்கை மூலதனத்தைப் பாதுகாக்கும். அதன் ஒரு முயற்சியாக கடந்த வியாழக்கிழமை நல்லூர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமாரினால் வல்லாரைக்கன்றுகளை உற்பத்தி செய்யும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# கிளீன் ஸ்ரீலங்கா அலுவலகம் யாழில் திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் மாகாண ஒருங்கிணைப்பு அலுவலகம் நேற்று முன்தினம் யாழ் பொலிஸ் நிலையத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால மற்றும் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய, மீன்பிடி அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் தொடர்பில் விளக்கமளிக்கப் பட்டது. (நி-33)

# இராசிபலன்

05.01.2025
மார்கழி 21, ஞாயிற்றுக்கிழமை
சஷ்டி முன்னிரவு 9.21 மணிவரை

புரட்டாதி முன்னிரவு 9.32 மணிவரை
சுபநேரம் 9.31-11.01 மணிவரை
இராகுகாலம் 5.01-6.31 மணிவரை

விநாயக சஷ்டி விரதம்
திருக்காட்சி ஞாயிறு, சித்தாமிர்தம்
சந்திராஷ்டமம் -ஆயிலியம், மகம்

வளவன்

**மேஷம்** — புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், பயணத்தில் பலனுண்டு.

**கடகம்** — மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** — நன்மைகள் நடைபெறும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும்.

**மகரம்** — பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்** — பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு, மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி குடிகொள்ளும்.

**சிம்மம்** — உதவி செய்த சிலர் உதாசீனப்படுத்துவது கண்டு வருத்தமடையலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வேலைச் சுமை கூடும், உடல் நலனில் அதிக கவனம் தேவை.

**விருச்சிகம்** — பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சுப செய்திகள் வந்து சேரலாம், தொலைபேசி வழியில் உற்சாகம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்** — நண்பர்களால் வளர்ச்சி கூடும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** — பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், கௌரவமான நாள்.

**கன்னி** — பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் வெற்றி தரும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு

**தனுசு** — பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறலாம்.

**மீனம்** — குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, புதியவர்களின் நட்பு கிடைக்கும், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

இல்லத் தூய்மையைவிட இதயத் தூய்மை உயர்ந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
Viber 076 636 3378
நாதம் 474
05.01.2025

# கடந்த காலத்தை மறந்ததும் மறைப்பதும்!

**“கடந்த கால அரசை விமர்சிப்பதை நிறுத்திவிட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அரசுக்கு அறிவுரை கூறியிருப்பது வேடிக்கைக்குரியது**

அபிமன்யு



கடந்த கால ஆட்சியாளர்களை விமர்சிப்பதை விட்டுவிட்டு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள்.

யாரால்: முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வரும் பொதுஜன பெரமுன தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவால்

யாருக்கு: ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு

எச்சந்தர்ப்பத்தில்: கடந்த கால அரசுகள் நாட்டின் வளங்களைக் கொள்ளையடித்ததால் தான் நாடு அதளபாதாளத்துக்குள் சென்றுவிட்டது என தேசிய மக்கள் சக்தியினர், நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் கருத்துரைத்ததற்கு பதில் வழங்கும் முகமாக நாமல் ராஜபக்ஷவினால் கூறப்பட்டது.

நாடு பயங்கரவாதத்துக்குள் சிக்கிக் கிடக்கிறது என்று கூறி பயங்கரவாதத்தை அழிப்பதான போர்வையில் ஒரு இன அழிப்பையே மேற்கொண்டது ராஜபக்ஷ அரசு. அந்த இன அழிப்பை மறைக்கும் வகையில் இறுதிப் போரில் இறந்தவர்கள் எவரும் பொதுமக்கள் அல்ல, அவர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் என சர்வதேசத்திற்கு செய்தி வழங்கினார் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

பயங்கரவாதத்தை அழித்த மகிந்த ராஜபக்ஷ சிங்கள மக்களால் கதாநாயகனாய்ப் பார்க்கப்பட்டார். இனி ஒருபோதும் வீழ்த்த முடியாத தலைமை ராஜபக்ஷக்களின் தலைமை என்ற அந்தஸ்தை தாமாகவே எடுத்துக் கொண்டனர் ராஜபக்ஷக்கள்.

இதுவே இந்த நாட்டின் மிக மோசமான நிலைக்குக் காரணமாகப் போகிறது என்பதை சிங்கள மக்கள் கனவில் கூட நினைத்திருக்கவில்லை.

ஆயினும் அந்த மாற்றம் வெகு சீக்கிரமே வந்து சேர்ந்தது. தன்னை எதிர்க்கும் அந்த எதிரி யார் என்று காண ஆவலாக இருக்கிறேன் என மகிந்த ராஜபக்ஷ உறுமிய போது அவர் அருகில் அவருடன் அப்பம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார் மைத்திரிபால சிறிசேன.

அவர் தான், தன் சாம்ராஜ்ஜியத்தை வீழ்த்தப் போகிறார் என்று தெரியாமல் கர்ஜித்தார் மகிந்த. அந்த கர்ஜிப்பிற்கு மைத்திரி தலைமையிலான அணி முற்றுப் புள்ளி வைத்தது.

மகிந்த ராஜபக்ஷவின் தோல்வி அவரை அவரது சொந்த ஊரான அம்பாந்தோட்டைக்கு அனுப்பி வைத்தது. அம்பாந்தோட்டையில் மகிந்தவை வரவேற்ற அவரது உறவுகள் கண்ணீர் விட்டு அழுது வரவேற்றதை அன்றைய ஊடகங்கள் முக்கிய செய்திகளாக பிரசுரித்திருந்தன.

இங்கு தான் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் சூழ்ச்சி ஆரம்பமானது. சகுனிகளின் காய் நகர்த்தல் நல்லாட்சியை நிலைகுலைக்க, மீண்டும் நாடு ராஜபக்ஷக்களின் கைகளுக்குச் சென்றது.

இப்போது கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக, மகிந்த ராஜபக்ஷ பிரதமராகிறார். நாடு எக்கேடு கெட்டால் எமக்கென்ன நாம் நினைத்ததைச் செய்து முடிப்போம் என்ற எண்ணப்பாங்கு நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்து விட, நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இலங்கை எட்டுத் திசையும் கடனால் சூழப்பட்ட நாடாக மாறியது.

இதன் விளைவு மக்கள் ராஜபக்ஷ அரசுக்கு எதிராக போர்க் கொடி தூக்கினர் “கோட்டா கோ கம” எனும் தொனிப் பொருளில் காலி முகத்திடலில் மக்கள் போராட்டம் தொடங்கி, அது மாதக்கணக்கில் நீண்டு சென்றது. ஆயினும் கோட்டாபய அரசு இளகுவதாய் இல்லை.

ஒரு கட்டத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பதவி விலக, ஜனாதிபதி கோட்டாபயவும் பதவி விலக வேண்டும் என்று கோசமிட்ட பொதுமக்கள் ஜனாதிபதிச் செயலகத்தை முற்றுகையிட, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு தப்பியோடினார்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொறுப்பேற்றார்.

அவர் நாட்டை மீட்டெடுப்பார் என்று மக்கள் சிந்திக்க கணம் கொடாது; “கோட்டா கோ கம” போராட்டக்காரர்கள் மீது ரணில் அரசாங்கம் கைவைத்தது.

இது பொதுமக்களை மேலும் கொதிப்படையச் செய்தது.

இந்த கொதிப்பின் வெளிப்பாடே தற்போது நாட்டு மக்களின் பெரும் வரவேற்புடன் ஆட்சியமைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தியின் பெரு வெற்றி.

மேற்குறித்த வரலாறு அனைவருக்கும் தெரிந்த ஒன்றாயினும் அதை கூற வேண்டிய சந்தர்ப்பத்தில் கூறுவது தானே சான்றோர் கடமை.

பாரம்பரிய கட்சிகள், வாரிசு அரசியல், ஊழல் நிறைந்த கட்டமைப்பு, சுயநலப் போக்கு, நாட்டின் சொத்துக்களை சூறையாடல், அதிகாரத்தை தவறாகப் பிரயோகித்தல் போன்றன நாட்டு மக்களைப் பெரிதும் பாதித்திருந்தன.

இவற்றிற்கு முடிவு கட்ட வேண்டுமெனின் ஒரு இயக்கத்தினால் மாத்திரமே முடியும் என்ற சிந்தனை சிங்கள மக்கள் மத்தியில் உதயமானது.

அநுர அலை பேரலையாகி தேசிய மக்கள் சக்தி பெரு வெற்றி பெற்றது.

இந்நிலையிலேயே நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை நிலைகெட்டிருக்க, கடந்தகால ஆட்சியாளர்களே காரணம் என தற்போதைய அரசாங்கம் சுட்டிக் காட்டி வருகின்றது.

நாட்டின் வங்குரோத்து நிலைக்கு, பயங்கரவாதத்தை அழிப்பதாய் நடத்தப்பட்ட போரே முக்கிய பங்காற்றுகின்றது. அத்துடன் கொன்றொழிக்கப்பட்ட சிறுபாண்மைத் தமிழ் மக்களுக்கு இன்று வரை எவரும் நீதியான தீர்வைப் பெற்றுத்தரவில்லை. தமிழ் மக்களின் கண்ணீரின் வீரியமும் இந்த நாட்டை உய்யவிடவில்லை என்பதே மெய்.

யார் இந்த நாட்டின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தனரோ, அவர்களே தற்போதைய ஆட்சியாளர்களைப் பார்த்து முன்னைய ஆட்சியை விமர்சிப்பதை நிறுத்திவிட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுங்கள் என்று கூறுவது வேடிக்கைக் குரியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது.

அமைதியைக் குலைக்க பண்டிதர் பரமலிங்கம் குரல் கொடுத்தார்.

**பண்டிதர்:-** கிளீன் சிறிலங்கா என்ற திட்டம் நடைமுறைக்கு வருமோ.

**விதானையார்:-** நடைமுறைக்கு வருமோ என்பதல்ல கேள்வி, அதை நடைமுறைப்படுத்த வேணும். அது தான் இங்க முக்கியம்.

**கங்காணி:-** உண்மை தான். எங்கட இலங்காபுரி அழகிய தெய்வீகம் நிறைந்த நாடு. எனினும் அரசியல்வாதிகளின் ஊழல் காரணமாகவும் பொது மக்களின் அசமந்தத்தாலும் எங்கட நாடு எல்லாத்தையும் இழந்து போய் நிற்குது.

ஒரு காலத்தில சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கு எதிராக இனவாதத்தீயைக் கக்கிச்சினம்.

அதன் விளைவு எப்படியாயிற்று என்பதை சிங்கள மக்கள் அனுபவித்த போது, ஆட்சி மாற்றம் தேவை என்பதை உணர்ந்தினம். அதின்ர விளைவு தான் கிளீன் ஸ்ரீலங்கா.

**மூப்பர்:-** சிங்கள மக்கள் மட்டுமல்ல, தமிழ் மக்களும் இன ஒற்றுமைக்கு உதவ வேணும் எண்டு முடிவு செய்திருக்கினம். இந்த நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலைக்க வேணுமெண்டு சிங்கள மக்கள் நினைத்தால், அதற்குத் தமிழ் மக்களும் உதவத் தயார் என்ற செய்தியை கடந்த பொதுத் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் தென்பகுதிக்கு வழங்கியிருக்கினம்.

**சாத்திரியார்:-** மூப்பர் சொல்லுறது சரிதான், அதேநேரம் எங்கட தமிழ் அரசியல்வாதிகளின்ர சந்தர்ப்பவாதத்திற்கும் சாட்டையடி கொடுக்க வேணும் என்பதைக் கடந்த பொதுத் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் நிரூபித்திருக்கினம்.

**சிறாப்பர்:-** சரி... சரி... கிளீன் ஸ்ரீலங்கா என்பது தனித்து புறச் சூழலைத் துப்புரவு செய்யிறது மட்டுமல்ல.

அத்தனை நிர்வாகங்களிலும் இருக்கக் கூடிய ஊழல்கள், மந்தமான செயற்பாடுகள் அனைத்தையும் கிளீன் செய்வதாக இருக்கும்.

அதைத் தான் கிளீன் ஸ்ரீலங்கா என்ற திட்டம் குறிக்கிறது.

**வாத்தியார்:-** எங்கட பொது மக்கள் விழிப்படைந்தால், எங்கட மண்ணில நடக்கிற அத்தனை அநியாயங்களையும் அட்டூழியங்களையும் தடுத்து நிறுத்த முடியும்.

**சாத்திரியார்:-** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:-** சாத்திரியார், இப்ப நாங்கள் பஸ்ஸில பயணம் செய்யிறம். அந்த பஸ்ஸைச் செலுத்துகிற சாரதி கையடக்கத் தொலைபேசியில கதைத்தபடி பஸ்ஸை ஓட்டுகிறார் என்றால், உடன அங்க இருக்கிற பயணிகள் தங்கட எதிர்ப்பைக் காட்ட வேணும்.

சாரதி தொலைபேசியில கதைத்தபடி பஸ் ஓடுவதை வீடியோ செய்ய வேணும். அதை முகநூல் மற்றும் உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்க வேணும். இதைச் செய்வமாக இருந்தால், எங்கட மண்ணில நடக்கிற விபத்துக்களை முற்றாகத் தடுக்க முடியும்.

**விதானையார்:-** வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. எங்கட மண்ணில பல பேரைக் கொன்ற பெருமை டிப்பர் சாரதிகளுக்குத் தான் உண்டு. ஆகையால இனிமேல் டிப்பர் வாகனம் மோதி ஒரு உயிர் பலியாகுமெண்டால், அந்த டிப்பர் வாகனத்தை அந்த இடத்திலேயே வைத்து கொளுத்த வேணும்.

இரண்டு மூன்று டிப்பர் வாகனத்தை இப்படி கொளுத்தினால், டிப்பர் சாரதிகளும் டிப்பர் வாகன உரிமையாளர்களும் விழிப்படைவினம்.

வீதியில பக்குவமாக டிப்பர் வாகனத்தைச் செலுத்த வேணும் எண்டு நினைப்பினம்.

**வாத்தியார்:-** விதானையார் என்ன இருந்தாலும் விபத்தை ஏற்படுத்தின டிப்பர் வாகனத்தைக் கொளுத்த வேணும் எண்டு சொல்லுறது வன்முறையை ஏற்படுத்திறதாக இருக்கும். ஆகையால நாங்கள் அப்படி ஒரு கருத்தை ஏற்படுத்தக் கூடாது.



## சட்டங்களை மீறும் செயல்களை வீடியோ செய்து வெளியிடுங்கள்

**விதானையார்:-** வாத்தியார் நீங்கள் சொல்லுற கருத்தை நான் ஒரு போதும் ஏற்கமாட்டான்.

டிப்பர் மோதி ஆட்கள் உயிரிழக்கினம்.

அந்த இழப்பு உயிரிழந்த குடும்பங்களுக்கு மட்டும் தான்.

ஆனால் டிப்பர்காரனுக்கு எந்த இழப்பும் இல்லை. அவர்களுக்கு இழப்பு ஏற்படாத வரையில, டிப்பர் வாகன சாரதிகளோ அல்லது ஏனைய வாகன சாரதிகளோ திருந்தப் போவதில்லை.

**வாத்தியார்:-** விதானையாரின்ர கோபத்தில நியாயம் இருக்குது தான்.

என்ன இருந்தாலும் எதையும் சட்டத்ினூடாக அணுகுவது தான் நல்லது.

**விதானையார்:-** வாத்தியார் ஐயா! சட்டத்தினூடாக எதையும் அணுக நினைத்தால், ஒவ்வொரு விபத்தும் பொலிஸாருக்கு நல்ல உழைப்பு என்பதாகத் தான் நிலைமை முடியும்.

என்னைப் பொறுத்தவரை எங்கட தமிழ் மண்ணில நடக்கிற விபத்துக்களைத் தடுக்கிறதாக இருந்தால், குற்றம் செய்தவரைப் பொது மக்கள் தண்டிக்க வேணும்.

எங்கட பிரதேசங்களில பணியாற்றுகிற போக்குவரத்துப் பொலிஸார் ஒருபோதும் விபத்தைத் தடுக்க மாட்டினம்.

அவர்களைப் பொறுத்தவரை ஒரு விபத்து நடந்தால், பல இலட்சங்கள் வருமானம் என்பதாகத் தான் இதுவரையில நிலைமை இருக்குது.

அது தவிர விபத்துக்களின் போது குற்றம் செய்த சாரதியை, வாகன உரிமையாளரைக் காப்பாற்றி விடுவதற்கு இஞ்ச தரகர்களும் இருக்கினம்.

ஆகையால என்னைப் பொறுத்தவரை பிழையான சாரத்தியத்தால விபத்து ஏற்பட்டு அதால ஒருவர் பாதிக்கப்படுவாராக இருந்தால், பொது மக்கள் சேர்ந்து அந்த வாகனத்தை எரிக்க வேணும். அவ்வாறு பொது மக்கள் தண்டனை கொடுக்க வெளிக்கிடும் போது தான் காக்கிச் சட்டைகளுக்கு ரோசம் வரும்.

மற்றும்படி தமிழன் விபத்தில இறந்தால் அதற்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க வேணும் எண்டு பொலிஸார் ஒருபோதும் நினைக்கமாட்டினம்.

விதானையார் கோபாவேசத்துடன் கூற, ஆலடி அப்படியே நிசப்தமாகியது. நிசப்தத்தைக் குலைக்க பண்டிதர் எழுந்தார்.

விதானையாரின்ர நியாயபூர்வமான கோபத்தை எவரும் நிராகரிக்க முடியாது. ஆனாலும் சட்டத்தை மீறுகின்ற போது அதனால ஏற்படுகிற பாதகங்கள் தனிநபர் கள் மீது பாரிய விளைவு களை ஏற்படுத்தும்.

ஆகையால எதையும் நிதானமாகக் கையாள வேணும்.

**சிறாப்பர்:-** வாத்தியார் சொன்னது போல கையடக்கத் தொலைபேசியில கதைத்துக் கொண்டு வாகனம் செலுத்துகிற சாரதிகள், பஸ் வண்டிகள் போட்டி போட்டுக் கொண்டு ஓடுவது, சில இளவல்கள் குறூப்பாகச் சேர்ந்து மோட்டார் சைக்கிள் றேஸ் நடத்துவது என முறைகேடான சம்பவங்களை வீடியோ செய்து ஆதார ரீதியாக உரியவர்களுக்கு அனுப்பி வைக்கிறது பயன் தரும்.

அதேநேரம் இப்படியான ஆதாரங்களைத் தமக்கு அனுப்பி வைக்குமாறு விசேட இலக்கங்களைப் பொலிஸாரோ அல்லது சம்பந்தப்பட்ட உயர் அரச அமைப்புக்களோ வெளிப்படுத்தலாம்.

இவ்வாறான செயற்பாடுகள் தான் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டும்.

**மூப்பர்:-** கிளீன் சிறிலங்கா என்பதில பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தங்கட அலுவலகங்களையும் புறச் சூழலையும் சுற்றிப் பார்க்க வேணும்.

அண்மையில நாவற்குழியில இருக்கிற அம்மாச்சி உணவகத்திற்குப் போனனான்.

அங்க உணவருந்துகிற இடத்தில இருக்கிற மின் விசிறியில குறைந்தது ஒரு கிலோ நிறையுடைய தூசிகள் படிந்திருக்குது.


தயவு செய்து எங்கட கட்டிடங்களையும் மின் உபகரணங்களையும் அடிக்கடி தூசி தட்டித் துப்புரவு செய்ய வேணும்.

எங்கட மண்ணில எவ்வளவு தான் அழகான கட்டிடங்களைக் கட்டிக் கொடுத்தாலும் ஒரு சில மாதங்களிலேயே அந்தக் கட்டிடம் தூசு பிடித்துக் கிடக்கிறதைப் பார்க்க முடியும். அதிலும் அரச கட்டிடம் எண்டால் சொல்லவும் தேவையில்லை.

இவ்வாறு மூப்பர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.


ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழரசுக் கட்சி சுத்திகரிக்கப்படுகிறதா அல்லது சுக்குநூறாகிறதா?

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு
SMS,
Whats app செய்யுங்கள்




ஐ.பி.எல்-2025 இல் டோனி விளையாடுவது குறித்து என்ன நினைக்கிறீர்கள் வியாசரே?

**நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் இந்த உலகம் எப்படி இருக்கும்?**

மதுவன்- மீசாலை

மனிதர்கள் சந்தோசம் நிலைத்திருக்கும் போது கடவுளை நினைப்பதை விட துன்பம் மேலோங்கியிருக்கும் போதுதான் அதிகமாக இறைவனை நினைக்கிறார்கள், வழிபடுகிறார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் மனிதன் நினைப்பதெல்லாம் நடந்துவிடும் சூழ்நிலை இருந்தால் இறைவனின் தேவை இருக்காதல்லவா? இறைவனை மறந்து மனிதன் ஆட ஆரம்பித்துவிடுவான். அதனால்தான் கடவுள் மனிதனை சோதிக்கிறான். சுமை கொடுக்கிறான்.

**பிறந்த புதுவருடத்திலாவது இலங்கையில் சமாதானம் ஏற்படுமா வியாசரே?**

விஜயகுமார்-முகமாலை

முதலில் சமாதானம் என்பது எது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு இனத்தை ஒட்டுமொத்தமாய் அழித்து கருவறுத்தவர்கள் எம் கண் முன் இருக்கிறார்கள்.

இப்போதும் அவர்கள் அழிக்கப்பட்ட இனத்திற்கு எதிராக அதிகாரத் தொனியில் பேசுகிறார்கள், நடந்து கொள்கிறார்கள்.

இவர்களுக்கு சரியான தண்டனை வழங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கினால் தானே அது தர்மமாகும். அந்த நீதி எப்போது நடக்கிறதோ அன்றைக்கே இலங்கையில் சமாதானம் மலரும். இல்லையேல் அது வெறும் பெயரளவிலே இருக்கும்.

**இனவாதம்-மதவாதம்-பகைவாதம் இவை பற்றி வியாசர் என்ன நினைக்கிறீர்கள்?**

தவராஜன்-கொற்றாவத்தை

ஒரு நாடு இரு இனம். பெரும்பான்மை இனம் சிறுபான்மையினரை கொடுமைப் படுத்திக் கொண்டே இருக்கிறது. அவர்களை இந்த நாட்டின் குடிமக்கள் என ஏற்றுக் கொள்ள மறுக்கிறது.

எங்கு புராதன இந்துக் கோயில்கள் இருக்கின்றதோ அங்கு பௌத்தம் இருந்ததாய் விதண்டாவாதம் புரிந்து அதை அபகரிக்க முயற்சித்துக் கொண்டேயிருக்கிறது.

இந்த இரண்டின் அழுத்தத்தை தாங்க இயலாத சிறுபான்மை இனம் கொதித்தெழ, அதைப் பகைவாதமாக்கி இலங்காபுரியை கொதிநிலையில் வைக்கவே முயற்சிக்கின்றனர் பெரும்பான்மை சக்திகள்.

**ஏழைகளுக்கு உதவி செய்யாத பலர் செல்வத்தை இறைவனுக்கு (கோயில்களுக்கு) அள்ளிக் கொடுக்கின்றனரே?**

கோகுலராஜா - கஜீபன்

அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்,
ஆலயம் பதினாறாயிரம் நாட்டல்,
பின்னர் உள்ள தருமங்கள் யாவும்,
பெயர் விளங்கி ஒளிர நிறுவுதல்,
அன்னயாவினும் புண்ணியம் கோடி,
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்
என்றான் மகாகவி பாரதி.

ஆயினும் இந்த அற்ப மனிதன் கோடிக்கு மேல் கோடி சேர்த்து மாடிக்கு மேல் மாடி கட்டி ஒருவாய் சோற்றை நிம்மதியாய் உண்ண முடியாமல் பணம் சேர்த்து கோவில்களுக்கு கொட்டிக் கொடுத்து மாலைக்கும் தெர்ப்பைக்கும் அதில் கிடைக்கும் மரியாதைக்கும் ஏங்கிக் கிடக்கிறான்.

கட்டாயமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய எத்தனை கோவில்கள் போதிய நிதியின்றி கட்டுமானங்கள் இடைநடுவில் நிற்கின்றன. அதையேனும் கொஞ்சம் கவனித்தால் அது பக்தர்களுக்கு நன்மையைத் தரும் அல்லவா?

**வீட்டின் கடைசிப் பிள்ளை பற்றிக் கூற முடியுமா வியாசரே?**

சிவாதூரி-நவிண்டில்

வீட்டின் கடைசிப் பிள்ளை எப்போதும் அறிவுள்ளதாயும் எதிலும் துணிச்சலுடனும் செயற்படுவதாகவும் இருக்கும்.

கடைக்குட்டிகளுக்கு வீட்டில் முன்னுரிமையும் அதிகமே. இது மூத்தவர்களைக் கடுப்பேற்றச் செய்தாலும் கடைக்குட்டிகள் அவர்களை கலாய்ப்பதில் தீவிரம் காட்டுவர்.




**தமிழரசுக் கட்சி சுத்திகரிக்கப்படுகிறதா அல்லது சுக்குநூறாகிறதா?**

சுதன்-குப்பிழான்

சிறுநீரகம் செயலிழந்த நோயாளர்களுக்கு இரத்த சுத்திகரிப்பு மேற்கொள்ளப்படும். அதை ஆங்கிலத்தில் Dialysis என்று கூறுவார்கள்.

இது சிறுநீரக நோயாளர்களின் நோய்த் தன்மையை குறைக்கக் கூடியது. சிறுநீரக மாற்றுச் சிகிச்சை மேற்கொள்ளும் வரை குறித்த சிகிச்சையை மேற்கொள்ளும் நோயாளி உயிர் அச்சுறுத்தல் இன்றி வாழலாம்.

சுத்திகரிப்புக்கு உயிர் ஆபத்தில் இருந்து மீட்டெடுத்தல் என்ற அர்த்தம் இருக்கிறது எனின் தற்போதைய தமிழரசுக்கட்சியின் செயற்பாடு கள் ஒருநாளும் சுத்திகரிப்பு ஆகாது.

சுக்குநூறாதல் நடக்கிறது என்பது நூறு விகிதம் உண்மை. அது முழுமையாக உடைந்ததும் இறந்த நாயில் இருந்து உண்ணி கழருவது போல சிலர் கழன்று விடுவார்கள். இது சர்வ நிச்சயம்.

**ஐ.பி.எல்-2025 இல் டோனி விளையாடுவது குறித்து என்ன நினைக்கிறீர்கள் வியாசரே?**

ஜெ.பிரணாப்-பருத்தித்துறை

மகேந்திரசிங் டோனி அற்புதமான வீரர். சிறந்த தலைமைத்துவப் பண்புடையவர்.

அவர் இந்திய அணியை தலைமை தாங்கிய போது மூன்று வகையான கிரிக்கெட்டிலும் உலக சம்பியனை இந்தியாவுக்குப் பெற்றுக்கொடுத்தவர்.

அப்போதெல்லாம் கிண்ணத்தை வாங்கி வீரர்களிடம் கொடுத்துவிட்டு அமைதியாக இருப்பார். புகைப்படங்களிலும் அணியின் இறுதி வரிசையில் ஓரமாக நிற்பதை அவதானிக்கலாம்.

அந்த உன்னத தலைமைத்துவப் பண்பு தான் டோனியை இன்றுவரை மக்கள் கிரிக்கெட்டில் இருந்து விடைபெற விடுகிறார்கள் இல்லை.

டோனியை மஞ்சள் உடையில் பார்க்க நானும் ஆவலாக உள்ளேன்.

**ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும் விசேட தனியார் வகுப்புகள் நின்று விடுமா வியாசரே?**

வியாசகன்-யாழ்ப்பாணம்

முன்பெல்லாம் தனியார் வகுப்புகள் நடைபெறுவதென்பது அரிதானதாகவே இருந்தது.

இப்போது தனியார் வகுப்புகள் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கையில் இன்றியமையாத ஒன்றாக மாறிவிட்டன.

சுருங்கக் கூறினால் பாடசாலைகளுக்கு சமாந்தரமாக தனியார் வகுப்புகள் நடைபெறுகின்றன என்றால் அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

சயன்ஸ் வேல்ட், சயன்ஸ் கோல், டி.எம்.ஐ, பொருளியற் கல்லூரி, டி.சி.எம், வி.ஐ.ரி.எம். ஏ.என், சி.சி.ஏ போன்ற பல தனியார் கல்வி நிறுவ னங்கள் மாணவர்களுக்கு நல்ல கல்வியை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூன்று முத்தங்கள்

மூன்று முத்தங்கள்
வாழ்வை முழுமையாக்குகின்றன
கண்களில் இட்ட முத்தம்
நட்சத்திரங்களை அருகில்
காண வைக்கிறது
இதழ்களில் இட்ட முத்தம்
ஒரு நதியின் ஆழத்தில்
நம்மை மீன்களாக்குகிறது
அன்பே
மனம் கனிந்து
மனம் கசிந்து
எப்போதோ பாதங்களைக்
கையிலேந்தி
இடும் முத்தமொன்று இருக்கிறது
அது நம் அகந்தை அழியும் முத்தம்
நாம் நடந்த கால்களைப்
பரிசுத்தமாக்கும் முத்தம்
அது அடிமை முத்தமல்ல
நிரந்தரமாக ஆளும் முத்தம்.

**கவிஞர் - மனுஷ்ய புத்திரன்**

# புரளும் காலம்!



கைநாட்டு வைத்தபின்
கட்டை விரல் மையை
தலையில் தேய்த்துக்கொண்ட
தாத்தாவின் பார்வையிலும்
தானியங்கிக் கதவு திறக்கப்
பதிக்க
கட்டை விரல் ஈரத்தை
சட்டையில் தேய்த்துக்கொள்ளும்
பேத்தியின் பார்வையிலும்
புரட்டுகிறது காலம்.

**- ஸ்ரீநிவாஸ் பிரபு -**

# தவறு என்றார் தவறானவர்...!

வாழ்க்கையில் தவறான
மனிதர்களை
சந்திக்கலாம் – ஆனால்
தவறான மனிதர்கள்
என்றும் நம் வாழ்வில்
நிலைப்பது இல்லை
தவறான மனிதர்கள்
தவறான காரணங்களை
உருவாக்கி...!
தவறானவர்களாக
காண்பித்து விட்டு
தவறேதும் செய்யாதது போல்
சத்தம் இன்றி
விலகிவிடுவார்கள்...
அநியாயத்தால்
தவறானவர்கள் கூறும்
தவறானவர்கள்
தவறும் அல்ல.
தவறே செய்து விட்டு
தன்னில் தவறு இல்லை
என்று கூறும்
அதி புத்திசாலிகள்
சரியும் அல்ல...!

**- ஹனிஸ்ரன் வெனிஸ்ரா -**



# அன்புள்ள அம்மா

தாயின் கண்ணீரை தன் கையால் துடைக்கும் சிறு மகன் போல எதை நினைத்தும் அழாதே அம்மா கவலையோடு மகன் பார்க்கும் போது கொஞ்சம் எம்மை கவலைப்படத்தான் செய்கின்றது தாயின் அன்பை மகன் மறக்கலாம் ஆனால் மகனை ஒருபோதும் தாய் அவனை மரணம் வரை மறப்பதில்லை வார்த்தையால் சொல்ல முடியாது தாயின் அன்பை.

**த.லினுஷயன் - அரசடி, வட்டுக்கோட்டை**

## அன்பு வாசகர்களே!

உங்கள் அபிமான சங்குநாதத்தில்
நீங்களும் எழுதலாம்....

- அரசியல்
- இலக்கியம்
- கவிதை
- கட்டுரை

ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126



# "தேரும் திங்களும்"

**மஹாகவி து. உருத்திரமூர்த்தி**

ஊரெல்லாம் கூடி ஒருதேர் இழுக்கிறதே
வாருங்கள் நாமும் பிடிப்போம் வடத்தை
என்று
வந்தான் ஒருவன்.
வயிற்றில் உலகத்தாய்
நொந்து சுமந்திங்கு நூறாண்டு வாழ்வதற்காய்ப்
பெற்ற மகனே அவனும்.
பெருந் தோளும்
கைகளும், கண்ணில் ஒளியும், கவலையிடை
உய்ய விழையும் உளமும் உடையவன்தான்.

வந்தான். அவன் ஒரு இளைஞன்,
மனிதன் தான்.
சிந்தனையாம் ஆற்றற் சிறகுதைத்து வானத்தே
முந்த நாள் ஏறி முழுநிலவைத் தொட்டுவிட்டு
மீண்டவனின் தம்பி
மிகுந்த உழைப்பாளி!

"ஈண்டு நாம் யாரும் இசைந்தொன்றி நின்றிடுதல்
வேண்டும்" எனும் ஓர் இனிய விருப்போடு
வந்தான் குனிந்து வணங்கி வடம் பிடிக்க.

"நில்!" என்றான் ஓராள்
"நிறுத்து!" என்றான் மற்றோராள்.
"புல்" என்றான் ஓராள்
"புலை" என்றான் இன்னோராள்
"சொல்" என்றான் ஓராள்
"கொளுத்து" என்றான் வேறோராள்.



கல்லொன்று வீழ்ந்து
கழுத்தொன்று வெட்டுண்டு
பல்லோடு உதடுபறந்து சிதறுண்டு
சில்லென்று செந்நீர் தெறிந்து
நிலம் சிவந்து
மல் லொன்று நேர்ந்து
மனிசர் கொலையுண்டார்.

ஊரெல்லாம் கூடி இழுக்க உகந்த தேர்
வேர் கொண்டதுபோல் வெடுக்கென்று நின்றுவிடப்
பாரெல்லாம் அன்று படைத்தளித்த அன்னையோ
உட்கார்ந் திருந்துவிட்டாள் ஊமையாத் தான்பெற்ற
மக்களுடைய மதத்தினைக் கண்டபடி.

முந்த நாள் வான முழுநிலவைத் தொட்டுவிட்டு
வந்தவனின் சுற்றம்
அதோ மண்ணிற் புரள்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் அழியப் போகிறதா?



**2025** ஆம் ஆண்டு பிறந்து விட்டது...

ஒவ்வொரு வருடப் பிறப்பிலும் இந்த ஆண்டு நமக்கு ராசியானதாக அமையுமா என்பதை ஜோதிடம் பார்த்து அறிந்து கொள்ளவிரும்புவர்.

இதேபோல மொத்த உலகத்துக்கும் ஜோதிடம் சொன்ன தீர்க்கதரிசிகள் உள்ளனர். அவர்களுள் பாபா வாங்கா மற்றும் நாஸ்ட்ராடமஸ் புகழ் பெற்றவர்கள். இவர்களது பல தீர்க்க தரிசனங்கள் இதற்கு முன்பு நிறைவேறியிருப்பதாகக் கூறுகின் றனர்.



2025ஆம் ஆண்டு இவர்களின் தீர்க்க தரிசனங்கள் என்னென்ன என்பதை அறிய பலரும் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

பாபா வாங்கா மற்றும் நாஸ்ட்ராடமஸ் இருவருக்கும் குறிப்பிடத்தக்க அளவில் பின் தொடர்பவர்கள் உள்ளனர். இன்றும் இவர்களது தீர்க்கதரிசனங்களை ஆராய்ந்து கூறிவருகின் றனர்.



1996 ஆம் ஆண்டு மறைந்த பாபா வாங்கா செப்ரெம்பர் 11 தாக்குதல், இளவரசி டயானாவின் மரணம், செர்னோபில் டிசாஸ்டர் போன்ற சம்பவங்களை முன்னறிவித்ததாகக் கூறுகின்றனர். நாஸ்ட்ராடமஸ் தனது புத்தகத் தில் பல பேரழிவுகள் குறித்த தீர்க்கதரிசனங் களை எழுதியுள்ளதாகக் கூறுகின்றனர்.

**பாபா வாங்கா கணிப்புகள் !**

உலக அளவில் 2025ஆம் ஆண்டு நடக்கப்போகும் விடயங்களாக பல்கேரிய தீர்க்கதரிசி பாபா வாங்கா முன்னறிவித்துள்ளவை,

- ஐரோப்பாவில் மக்கள் தொகையை பாதிக்கும் அளவு மிகப் பெரிய போர்.
- உலக அளவில் மிகப் பெரிய சக்தியாக ரஷ்யா எழுச்சி பெறுதல்.
- அமெரிக்காவின் மேற்கு கடற்கரையோரத்தில் முக்கிய நில அதிர்வு மற்றும் தொடர் இயற்கை பேரிடர்கள் ஏற்படும்.
- இறந்த எரிமலைகள் மீண்டும் உயிர்பெறுதல்.

**நாஸ்ட்ராடமஸ் எச்சரிக்கை !**

பிரஞ்சு தீர்க்கதரிசி நாஸ்ட்ராடமஸின் புத்தகத்தின் படி சொல்லப் பட்டுள்ள தீர்க்கதரிசனங்கள்,

- ஐரோப்பிய எல்லையில் தீவிரமான போர்கள்
- பிரிட்டனுக்குள் உள்நாட்டு போர் மற்றும் நோய்த் தாக்கம் பழைய கொள்ளை நோய் திரும்புதல்.
- பாரம்பரிய மேற்கத்தேய நாடுகளில் இருந்து உலகை கட்டுப்படுத்தும் சக்தி மாறுதல்.

**ஒரே மாதிரியான கணிப்புகள் !**

பாபா வாங்கா 20ஆம் நூற்றாண்டில் பல்கேரியாவில் வாழ்ந்தவர். நாஸ்ட்ராடமஸ் 16ஆம் நூற்றாண்டில் பிரஞ்சு பகுதியில் வாழ்ந்தவர். பல ஆண்டுகள் மற்றும் கலாசார வித்தியாசத்துடன் வாழ்ந்த தீர்க்கதரிசிகளின் முன்னறிவிப்பில் சில ஒரே மாதிரி இருப்பதுண்டு.

2025 ஆம் ஆண்டு உலகின் ஆதிக்க சக்தியாக இருக்கும் நாடு மாறுதல் மற்றும் ஐரோப்பாவில் பெரும் போர் ஆகிய விடயங்களை இருவரும் கணித்துள்ளனர்.

# ஆச்சி அறிவுரை



## சங்கடப் படலை

என்னடா பேராண்டி பாட்டியை நினைவிருக்கோ? இண்டைக்கு உனக்கு சங்கடப் படலை பற்றிச் சொல்லப்போறன்.

இந்தச் சொல்லு உனக்குப் புதிசா இருக்கும். இருந்தென்ன செய்ய, உன்ர அப்பா, அம்மா உனக்கு பழைமைகளைச் சொல்லித் தரேல் லையே.

சங்கடப் படலை எண்டுறது யாழ்ப்பாணத்துக் கலாசார முறை. இது ஈழத்தமிழருக்கே உரித்தான பாரம்பரியம்.

வீட்டு வாசலில வீட்டுப் படலையோட சேத்து கூடாரம் போல உயரமான கொட்டகை இருக்கும். கொட்டகையின்ர இரண்டு பக்கமும் ஆக்கள் இருக்கக்கூடிய மாதிரி திண்ணை அமைச்சிருக்கும்.

திண்ணை ஓரத்தில மண் பானையில தண்ணீர் நிறைச்சிருக்கும். அதன் ஒரு ஓரமா சிறு தொட்டி கட்டி, அதில தண்ணீர் நிறைச்சிருக்கும்.

நீண்ட தூரம் பயணம் செய்யிற ஆக்கள் களைப்பாறுறத்துக்கு இது உதவியா இருக்கும். அதோட பானையில் இருக்கிற தண்ணீர் தாகம் தீர்க்கிற மாதிரியும் இருக்கும்.

இது மட்டுமல்லாமல் தொட்டியில இருக்கிற தண்ணிய ஆடு, மாடு போன்ற மிருகங்கள் தாகம் தீர குடித்துச் செல்லும்.

இது எங்கட யாழ்ப்பாணக் கலாசாரத்தின்ர விருந்தோம்பல் பண்பாட்டையெல்லோ விளக்கி நிக்குது.

வீதியில போகிறவர்கள் களைப்பாறி தாகம் தீர்ந்து போகட்டு மெண்ட பொதுச்சிந்தனை எங்கட முன்னோர்களிட்ட நிறைய இருந்தது.

அதனால தான் இப்படி பல நல்ல சிந்தனைகளை எங்கட சமூகத்தில விதைச்சு வச்சிருக்கினம். ஆனால் எல்லாத்தையும் நாங்கள் உடைச் செறிஞ்சு போட்டம். சங்கடப் படலைகளையும்தான்.

என்ர காணி - உன்ர காணி எண்டு காணி - வேலிச் சண்டையில மினக்கெட்டு : கோட்டு, கேசு எண்டு திரியுறம்.

வீடுகள் தான் கேசோட போகுதெண்டா கோவில்களையும் நீதி மன்ற படி ஏற வச்சிட்டம்.

பத்துப் பரப்பில காணி வேண்டி, மேல்மாடி வீடு கட்டி, மாபிள் பதிச்சு, முற்றத்துக்கு கல்லும் பதிச்சு, பத்தடிக்கு மதிலை உயர்த்திக்கட்டி, பதின்மூன்று அடிக்கு கேற்றை உயர்த்திப் போட்டு, வீடுகளைப் பூட்டி வச்சிட்டு அலுவலகங்களிலையும் ஆடம்பர விழாக்களிலையும் மினக்கெடுறம்.

ஆரும் வீட்டுக் கேற்றிலை தட்டினா, வந்து பதில் சொல்லுற தெண்டால் அது ஒரு நாளும் நடக்காது.

மீறி வீட்டுக்காரர்... வீட்டுக்காரர்... எண்டு தொண்டை கிழிய கத்திக் கூப்பிட்டால், பத்தடி தூரம் தள்ளி நிண்டு ஏன் வந்தனியள்? எண்டு கேக்குறதுதான் இப்போதைய எங்கட மரபு.

வந்தாரை வரவேற்று, உபசரித்து வழி அனுப்பும் தமிழினம் எண்டு எங்களுக்கு நாங்களே புகழ்மாலை சூட்டிக்கொள்ளுறம்.

ஆனால் எங்கட பண்பாடு, கலாசாரத்தை மறந்து மாற்றான் தோட்டத்து மல்லிகைக்காக ஏங்கிறம்.

காசு - பணம் இண்டைக்கு வரும் நாளைக்குப் போகும் எண்டு மேடைகளில பேசி முடிச்சிட்டு, வீட்டுக்குப் போகேக்க பத்து ரூபா வாழைப்பழத்தை இரண்டு ரூபாவுக்கு தர ஏலாதோ எண்டு பேரம் பேசுறம்.

ஆனால் பூட்சிற்றிகளில அடிச்ச பிறைசை அப்படியே குடுத்திட்டு பம்பர் பரிசுக்கு போன் நம்பரைக் குடுத்திட்டு வாறம்.

இங்க பிரச்சினை இருக்கு பேராண்டி! நீ சமூகத்தைப் புரிஞ்சு கொள்ளு. நீ என்ன விதைக்கிறியோ அதுதான் விளையும். நீ இந்தச் சமூகத்திற்கு எதைக் குடுக்கிறியோ அதைத்தான் இந்தச் சமூகம் உனக்குத் திரும்பத்தரும்.

நீ குடுக்கப் போறது அன்பா ! வெறுப்பா ! எண்டுறதை நீதான் முடிவெடுக்க வேணும். எதுவெண்டாலும் உன் முடிவு சரியான முடிவா இருக்கட்டும். இதுதான் இந்தப் பாட்டியோட ஆசை.

**மாவை நா.கஜேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்பில் சமஷ்டி முறையைக் கோருவதற்கான தமிழர்களின் உரிமை

புதிய அரசியலமைப்புப் பற்றிய விவாதங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில் பாராளுமன்றத்தில் பங்களிக்கும் பிரதான பங்கினைத் தமிழ்த் தேசியக் கட்சியாகிய தமிழரசுக்கட்சி பெற்றுள்ள நிலையில் தீர்வுக்கான முன்மொழிவுகள் தொடர்பில் காத்திரமான கொள்கை வகுப்பு ஒன்றினைப் பாராளுமன்றத்தில் அனைவரும் ஒருங்கிணைந்த வகையில் முற்



போட வேண்டியது மிக முக்கியமானது. தற்போது அமுலிலிருக்கும் 13 ஆம் திருத்தத்தின் கீழான மாகாண சபை அமைப்பு தொடர்ந்தியங்குதல் மற்றும் 13 இன் கீழான மாகாண சபை முறைமையினை முழுமையாக அமுலாக்குதல், அதனை அடிப்படைத் தளமாக வைத்து அதிகாரப் பரவலாக்கலை அர்த்தமுடைய வகையில் முழுமையாக்கி, வடக்கு-கிழக்கு இணைந்த சமஷ்டி முறையினை அடிப்படையாகக் கொண்ட தீர்வினைப் பெறுதல் என்ற வகையில் ஒரு படிமுறையான நிலை தமிழர்களின் தீர்வு விடயத்தில் பொதுவாக வலியுறுத்தப்பட வேண்டியுள்ளது. ஆயினும் இந்திய மாநிலங்களுக்குரிய அதிகார அமைப்புக் கப்பாற் செல்லுமளவுக்கு இலங்கை தொடர்பிலான இந்திய அணுகுமுறை பெருமளவுக்கு ஆதரவளிக்கும் நிலை இருக்கப் போவதில்லை. எனவே, மாகாணசபை முறைமையின் முழுமையான அமுலாக்கலிலிருந்து முன்னேற வேண்டிய நிலை அவசியமாகின்றது

**ஒற்றையாட்சி மந்திரத்தை இறுகப் பற்றியுள்ள சிங்களத் தலைமைகள் :**

இலங்கையில் சமஷ்டி (Federalism) வாதம் ஒரு பிரிவினை வாதம் என்ற கருத்து ஆரம்பம் முதல் இன்றுவரை சிங்கள மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. இனங்களுக்கிடையிலான ஒற்றுமையைத் தோற்றுவிக்கும் ஒரு அடிப்படையாகச் சமஷ்டிவாதம் அவர்களால் கருதப்படவில்லை. அது ஒரு தனியான மாநிலத்துக்கும், பிரிவினைக்கும் ஒத்த ஒன்றாக வியாக்கியானம் செய்யப்பட்டு வந்துள்ளது.

**ஒற்றையாட்சியை வலியுறுத்துபவர்கள் நாட்டுப்பற்றுடையவர்களாகவும் சமஷ்டியை வலியுறுத்துபவர்கள் தேசத் துரோகிகளாகவும் பாவனை செய்யப்பட்டுப் பெரும்பான்மை மக்கள் மத்தியில் கருத்தியல்கள் தாபிக்கப்பட்டுள்ளது. சமஷ்டி, சுயநிர்ணய உரிமை, தமிழ் மக்களின் அபிலாஷைகள் போன்ற பதங்கள் தனிநாட்டுக்கான அடித்தளங்கள் என்றவாறு பெரும்பான்மை மக்கள் மத்தியில் கருத்துக்கள் விதைக்கப்பட்டுள்ளது.**

அரசியலமைப்பின் 6 ஆவது திருத்தம்கூட ஒற்றையாட்சியைப் பேணிக்காப்பது தொடர்பில் கொண்டுவரப் பட்ட இதே கருத்தியல் தான். எந்தவொரு கணிசமான அதிகாரப் பகிர்வையும் பிரிவினை வாதம் என்று கருதும் நிலையே அவர்களிடம் இன்றும் காணப்படுகிறது.

1987இல் ஒற்றையாட்சி அடிப்படையிலான 13ஆவது திருத்தமும் மாகாணசபைகள் சட்டமூலமும் உயர் நீதிமன்றத்தில் அதன் யாப்புறுதன்மையைப் பரிசோதிக்குமாறு கேட்கப்பட்ட சந்தர்ப்பத்திலும்கூட அரசியலமைப்பின் உறுப்புரை 83 இற்கமைவாக அதன் ஏற்பாடுகள் தொடர்பில் மக்கள் தீர்ப்பு அவசியமா என்பதைப் பரிசீலித்த உயர் நீதிமன்ற அமர்வில் தீர்ப்பு இரண்டாகப் பிளவுபட்ட நிலையில் நாட்டின் ஒற்றையாட்சித் தன்மையைக் கேள்விக்குட்படுத்துமா? என்ற வகையில் கடுமையான விளக்கத்தை நீதிமன்றம் அளித்திருந்தமை அவ்வாறான ஒரு கருத்தியலையே பிரதிபலித்தது.13ஆம் திருத்தத்தைக் கொண்டு வந்து வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கான தற்காலிக இணைப்பை ஏற்படுத்திய அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் அச்சந்தர்ப்பத்தில், அத்தற்காலிக இணைப்புக்கு எதிரானவராகவே இருந்தார்.

13ஆவது திருத்தம் தமிழர்களின் தரப்பில் அதிகாரமற்ற, ஒற்றையாட்சி அடிப்படையிலான, பயனற்ற ஒன்றாக விமர்சிக்கப்பட்ட போதிலும் அதனைக் கொண்டு வந்த ஐக்கிய தேசியக்கட்சி உட்படப் பெரும்பாலான சிங்களக் கட்சிகளும் தலைவர்களும் 13ஆம் திருத்தத்தைப் பிரிவினை வாதத்தின் தொடக்கமென்ற வகையில் மிகப்பலமாக எதிர்த்தார்கள் என்பதும் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும்.

மேலும் 2000ஆம் ஆண்டில், சந்திரிக்கா அம்மையார் ஜனாதிபதியாக இருந்தபோது, தமிழர்களுக்கான அதிகாரப்பகிர்வுத் திட்டத்தை உள்ளடக்கி முன்வைக்கப்பட்ட ஒற்றையாட்சி அல்லாத கட்டமைப்பினை மத்திய - மாநில பிராந்தியங்களுக்கிடையிலான தெளிவான பகிர்வையும் உள்ளடக்கி முன் வைத்த புதிய அரசியலமைப்புத் திருத்த ஆவணத்தை எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றத்தில் கிழித்தெறிந்தது. தற்போது அவ்வாறு கிழித்தெறிவதற்கான சந்தர்ப்பம் இல்லை எனும் நிலையில் தற்போதைய அரசாங்கத்தினால் முன்வைக்கப்படுவதாகக் கூறப்பட்டுள்ள புதிய அரசியலமைப்பில் அதிகாரப்பரவலாக்கலின் தெளிவான வரையறைகளை ஏற்படுத்துவதை உறுதிப்படுத்துவதோடு சர்வசன வாக்கெடுப்புக்கு விடப்படுமிடத்து அது மக்களால் நிராகரிக்கப்படாமல் இருப்பதற்கான வேலைத்திட்டத்தையும் தமிழ்த் தரப்பு முறையாக கையாள வேண்டும் என்பதே மிக முக்கியம்.

**தற்போதைய அரசின் நிலை :**

வடக்கு-கிழக்கு இணைப்புச் சட்ட ரீதியற்றது. செல்லுபடியற்றது.என்ற தீர்ப்பினை 2006இல் உயர்நீதிமன்றம் வழங்கியபோது. (North-East Demerger Case) அதில் முக்கிய பங்கு வகித்த கட்சியே தற்போது ஆட்சியிலுள்ளது. மாகாணசபை முறைமையில் ஆளுநர்களின் அதிகார நிலை- சமநிலைப் படுத்துதல் தொடர்பான விவாதங்களில் அதிகாரங்கள் எதுவும் குறைக்கப்படக்கூடாது என்ற கருத்தையும் முக்கியமாக இக்கட்சி வெளியிட்டிருந்தது. காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்படமாட்டாது என்ற கருத்தையும் அது கொண்டிருந்தது. சில சந்தர்ப்பங்களில் மாகாணசபை முறைமை அவசியமற்றது என்ற



செல்வரட்ணம் சந்திரராஜா,
(முதுகலைமாணி -அரசறிவியல்)
முன்னாள் கல்விப் பணிப்பாளர்,
கல்வி அமைச்சு.

கருத்தையும் வெளிப்படுத்தியிருந்தது. எது எவ்வாறாயினும், தமிழ் மக்களுக்கான தீர்வினை உள்ளடக்கிய புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டு மக்கள் தீர்ப்புக்கு விடப்படுமாயின், அன்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன வடக்கு-கிழக்கு தற்காலிக இணைப்புக்கெதிராகப் பிரசாரம் செய்வேன் எனக் கூறியது போன்ற நிலைமை தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாட்டிலும் இருக்குமா? என்பதை மனதிற் கொள்ள வேண்டும். சிங்கள மக்களும் தலைவர்களும் ஒற்றையாட்சித் தத்துவத்துக்கப்பாற் செல்வதற்குத் தயாராக இல்லை யென்பதையே அவர்களின் கடந்த காலச் செயற்பாடுகள் அனைத்தும் வெளிப்படுத்துகின்றன.

ஆயினும், ஒருசில சிங்களத் தலைவர்களும் புத்திஜீவிகள் சிலரும் இது தொடர்பில் தெளிவான விளக்கத்தைப் பெற்றிருந்த போதிலும், இந்நிலைமைகள் யாவும் தமிழர்களின் போராட்டத்திலும் அதன் பின்னரான சமஷ்டித் தீர்வுக்கான விடயத்திலும் பாரிய பின்னடைவுகளைத் தோற்றுவித்துள்ளது என்பதே உண்மைநிலை.

**“சமஷ்டி” பற்றிய உயர் நீதிமன்றத்தீர்ப்பு :**

சிங்கள மக்கள் மத்தியில் காணப்பட்ட மேற்படி சிந்தனையின் வழியில் தான் 2014 (2017)இல் “சமஷ்டி” தொடர்பில் உயர் நீதிமன்றம் விளக்கமளிக்க வேண்டிய நிலை ஒரு வழக்கில் ஏற்பட்டது. அதாவது “தமிழரசுக்கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) அதன் உறுப்பினர்களினூடாக முன்னெடுக்கும் சமஷ்டிக் கோரிக்கையின் மூலம் பிரிவினையை ஏற்படுத்துவதற்கும், தனியரசை உருவாக்குவதற்கும் முயற்சிக்கின்றது.

(13 ஆம் பக்கம் பார்க்கவும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்



**படம் : சுமைதாங்கி (1962)**
**பாடியவர்: P.B.ஸ்ரீனிவாஸ்**
**இசை : விஸ்வநாதன்-ராமமூர்த்தி**
**பாடலாசிரியர் : கண்ணதாசன்**

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்..
மனிதன் என்பவன் தெய்வமாகலாம்..
மனிதன் என்பவன் தெய்வமாகலாம்..

வாரிவாரி வழங்கும் போது வள்ளலாகலாம்
வாழை போல தன்னை தந்து தியாகியாகலாம்
உறுதியோடு மெழுகு போல ஒளியை வீசலாம்

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்..
தெய்வமாகலாம்..

ஊருக்கென்று வாழ்ந்த நெஞ்சம் சிலைகளாகலாம்
உறவுக்கென்று விரிந்த உள்ளம் மலர்களாகலாம்
ஊருக்கென்று வாழ்ந்த நெஞ்சம் சிலைகளாகலாம்
உறவுக்கென்று விரிந்த உள்ளம் மலர்களாகலாம்
யாருக்கென்று அழுதபோதும் தலைவனாகலாம்
மனம்! மனம்! அது கோவிலாகலாம்..

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்
மனிதன் என்பவன் தெய்வமாகலாம்
மனிதன் என்பவன் தெய்வமாகலாம்..

மனம் இருந்தால் பறவை கூட்டில் மான்கள் வாழலாம்
வழியிருந்தால் கடுகுக்குள்ளே மலையைக்
-காணலாம்
மனம் இருந்தால் பறவை கூட்டில் மான்கள் வாழலாம்
வழியிருந்தால் கடுகுக்குள்ளே மலையைக்
-காணலாம்

துணிந்துவிட்டால் தலையில் எந்த சுமையும் தாங்கலாம்
குணம்! குணம்! அது கோவிலாகலாம்...

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்
வாரி வாரி வழங்கும் போது வள்ளலாகலாம்
வாழை போல தன்னை தந்து தியாகியாகலாம்
உறுதியோடு மெழுகு போல ஒளியை வீசலாம்

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்..
தெய்வமாகலாம்..

# புதிய அரசியலமைப்பில் சமஷ்டி....

(12 ஆம் பக்க தொடர்ச்சி...)

எனவும் சமஷ்டிக் கோரிக்கைக்கெதிரான உத்தரவைப் பெறும் பொருட்டும் தமிழரசுக்கட்சிக்கெதிராக, அவர்கள் தண்டிக் கப்பட வேண்டும் எனக்கோரி ஒரு தனி நபரால் கொண்டு வரப்பட்ட வழக்கு இதுவா கும் (Chan drasoma vs. Senathirajah- SC Spl. 03/2014 Decidedon04. 08.2017).

இவ்வழக்கினை ஆராய்ந்த உயர் நீதிமன்றம், சர்வதேச மனித உரிமை சாசனங்களின் பின்னணியிலான கருத்தியலைப் பின்பற்றியிருந்தது. அதற்கமைய "சமஷ்டி பிரிவினைவாதமல்ல, ('Federalism per se is not Separatism and thus not unconstitutional') என்ற தீர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தது. மேற்படி வழக்கில் உயர்நீதிமன்றத் தீர்ப்பின் சாராம்சத்தைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

- சமஷ்டி பிரிவினைவாதமல்ல அதனைக் கோருவது அரசியலமைப்புக்கு முரணானதல்ல.
- தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அரசியலமைப்பு ரீதியானது மட்டுமல்ல, அது உலகளாவிய உரிமை.
- தமிழரசுக்கட்சி போன்ற கட்சிகள் சமஷ்டியை ஊக்குவிப்பதற்கான சட்டபூர்வ உரிமைக்குள்ளேயே உள்ளன.

(i) Federalism per se is not seperatism and thus not unconstitutional. (ii) Right to self determination of the Tamils as a nation is not only constitutional; it is a universally accepted right. (iii) Parties such as ITAK are within their legal right to promote Federalism.

இதன்படி 1972இன் வட்டுக்கோட்டைத் தீர்மானம் மற்றும் திம்புப் பேச்சு வார்த்தைகளின் போது முன்வைக்கப்பட்ட மையக் கருத்துக்களை மேற்படி தீர்ப்பு அண்மித்திருப்பதாகவும் கருத முடியும். எனவே தமிழ் மக்களால் கோரப்படும் தீர்வு சமஷ்டிக் கோரிக்கையாக இருப்பதற்கும் அதனை அடிப்படையாகக் கொண்ட தமிழ் மக்களின் யாப்புக்கமைவான செயற்பாடுகளுக்கு எந்தவிதமான தடைகளும் இருக்க முடியாது என்பதும் அக்கோரிக்கை சட்டபூர்வமான உரிமை என்பதும் இது தொடர்பில் அரசு கவனத்திற் கொள்ள வேண்டும் என்பதும் இத்தீர்ப்பின் மூலம் வெளிப்படுத் தப்பட்டுள்ளது. இத்தீர்ப்பு ஒற்றையாட்சிக்கு மாற்றாக சமஷ்டிக்கான நகர்வுகளைச் சட்டபூர்வமானதாக ஆக்குகின்றது.

**தமிழ், சிங்கள மக்களிடையே சமஷ்டித் தீர்வை நோக்கிய விழிப்புணர்வு**

வழக்கில் "சமஷ்டி பிரிவினைவாத மல்ல, "('Federalism per se is not Separatism and thus not unconstitutional') என்ற உயர் நீதிமன்றத் தீர்மானத்துக்கமைய, நாடு பூராகவும் சமஷ்டி தொடர்பான புரிந்துணர்வை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்.

தழிழர்களின் ஈழ விடுதலைப் போராட்டம் அதன் பின்னரான சமஷ்டி அரசுக்கான போராட்டம் என்பன தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகளால் சிங்கள மக்கள் மத்தியில் இதுவரை முழுமையான புரிந்துணர்வு வேலைத்திட்டங்களோ, கருத்தாடல்களோ ஏற்படுத்தப்பட்டு தீர்வுத்திட்டம் தொடர்பில் சிங்கள மக்கள் மத்தியில் விளக்கப்படவில்லை என்றே கூறலாம். தமிழர்கள் மத்தியிலும் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் இது தொடர்பில் மக்கள் ஒருங்கிணைப்பு அவசியம்.

எனவே தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயத்தன்மையை சிங்கள மக்கள் ஏற்று, அதற்கு ஆதரவாகக் குரல் கொடுக்கும் அளவுக்கு தமிழ்த் தேசியத்தின் வேலைத்திட்டங்கள் அமைய வேண்டும். அதற்கும் மேலாக தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து ஓரணியாக்கும் பொருட்டு, தமிழ்த் தேசியம் தன்னைத் தயார்ப்படுத்த வேண்டும். ஏனெனில் நடந்து முடிந்த தேர்தலில், தமிழ்த் தேசியம் வடக்கு மக்களால் கைவிடப்பட்டுள்ளது? என்ற கருத்து தற்போது சிங்கள மக்கள் மத்தியில் பரவலாக நிலவுகிறது. பாராளுமன்றத்திலும் தேசிய மக்கள் சக்திப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இவ்வாறான கருத்தை வெளிப்படுத்தியிருந்ததையும் கருத்திலெடுக்க வேண்டும். எனவே முதலில், வடக்கு மக்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வுகளும் கருத்தாடல்களும் தேவை. பாராளுமன்ற உறுப்பினர்களினதும், மாகாண சபை உறுப்பினர்களினதும் மிக முக்கியமான பணியாக இது இருந்திருக்க வேண்டும். இருக்கவும் வேண்டும். மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் செய்ய வேண்டியதை, செய்ய வேண்டிய இடத்தில், செய்ய வேண்டிய நேரத்தில் செய்ய வேண்டும்.

வடக்கில் மாத்திரம் உரத்துப்பேசியும், உண்ணாவிரதமிருந்தும், ஊர்வலங்கள் நடத்தியும் எதுவும் நடைபெறாது, நடைபெறவுமில்லை.

பல்வேறு மட்டங்களில் தெற்கிலுள்ள புத்திஜீவிகளை அணுகி பல்வேறு சிங்கள பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள், பொதுசன அமைப்புக்கள், மத நிறுவனாங்களுடன் பரஸ்பரம் தமிழர்களின் அடிப்படையான உரிமைக் கோரிக்கைகளின் நியாயத்தன்மைகளைக் கொண்டு செல்ல வேண்டும். அவர்கள் இப்பிரச்சினையின் அடிப்படையையும், சமஷ்டிக் கோரிக்கையின் நியாயத்தன்மையையும் விளங்கிக் கொள்ளச் செய்ய வேண்டும்.

இதனைச் செயற்படுத்தும் வகையில் சிங்கள மக்கள் மத்தியில் கருத்துக்களைக் கொண்டு செல்லும் ஆற்றலும் விருப்பமும் உடையவர்கள் பாராளுமன்றத்திலும் மாகாண சபையிலும் இருக்க வேண்டும். தகைமையுடைய தமிழ்த்தேசியப் பற்றும், ஆற்றலுமுடையவர்கள் மாகாணசபைத் தேர்தலில் நிறுத்தப்பட்டு 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் முழுமையான அமுலாக்கலின் ஊடாக **"பிரிவினைக்குட்படாத சமஷ்டி"** எனும் தொனிப்பொருளில் அதிகாரப் பகிர்வுக்கான நாடளாவிய வேலைத் திட்டங்களை உரிய சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக மேற்கொண்டு சிங்கள மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும். இது தொடர்பில் பரஸ்பர கலந்துரையாடல்களும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

குறிப்பாக, தமிழர்கள் கோருகின்ற சமஷ்டித் தீர்வு எவ்வகையிலும் பிரிவினைக்கு வழிவகுக்காது என்ற நம்பிக்கையைச் சிங்கள மக்கள் மத்தியில் தெளிவுபடுத்த வேண்டும். அரசியற் தலைவர்களோடு மட்டும் பேசுவதால் இந்நிலையை ஏற்படுத்த முடியாது என்பதையும் வரலாற்று அறிவுமூலம் புரிந்து செயற்பட வேண்டும்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

431

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# பாரிசவாத பராமரிப்பு...

பாரிசவாதம்(Stroke) வந்த ஒரு நோயாளியை வைத்தியசாலையிலிருந்து வீட்டிற்கு அழைத்து வந்த பிறகு எப்படி அவரைப் பராமரிப்பது என்பது பற்றியும் அவருக்கு ஏற்படக்கூடிய சில பிரச்சினைகள் பற்றியும் இங்கு பார்ப்போம். முதலாவதாக பாரிசவாதம் ஏற்பட்ட ஒருவருக்கு மிகவும் மன அழுத்தம் காணப்படும். இது அவர்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். ஏனெனில் ஒரு சாதாரண மனிதராக இனி அவர்களால் சமூகத்தில் இயங்க முடியாது என்ற மனப்பாதிப்பு அதிகமாக காணப்படும். பாரிசவாதம் ஏற்பட்ட நோயாளிகளில் காணப்படும் முக்கியமான பிரச்சினையே இந்த மனத்தளர்வு தான். அவர்களுக்கு கோபம் அதிகமாக ஏற்படலாம், வெறுப்பு காணப்படலாம், தம்மை தனிமைப்படுத்திக் கொள்ள முயற்சிக்கலாம். இந்த நிலையில் இருந்து அவர்களை மீட்க, வைத்தியர்களுடன் இணைந்து, அவரது குடும்பத்தினரும் அவர்களுடன் நன்றாக் கதைத்து அவர்களை ஊக்கப்படுத்த வேண்டியது அவசியம். இப்படி செய்யும் போது நோயாளியின் மூளைக் கலங்கள் அதிகமாக செயற்பட தொடங்குவதோடு, இது நோயிலிருந்து அவர்களை குணப்படுத்துவதிலும் பெரிதும் பங்காற்றுகிறது.

ஒரு பாரிசவாத நோயாளிக்கு எல்லாவற்றையும் நாமே செய்து கொடுப்பது தவறாகும். அவரால் செய்யக்கூடிய அனைத்துச் செயற்பாடுகளையும், அவரையே செய்ய ஊக்கப்படுத்துவது தான் சிறந்தது. இவ்வாறு அவரை முயற்சிக்க விடாமல் நாமாகவே எல்லாவற்றையும் செய்து கொடுப்பது அவர் நோயிலிருந்து குணமடைவதைத் தாமதப்படுத்தும். சில நோயாளிகளுக்கு அவர்கள் அறியாமலேயே சலம், மலம் வெளியேறும் நிலை காணப்படலாம். இவ்வாறானவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட நேர இடைவேளையில் சலம், மலம் கழிக்க உதவி செய்யலாம். அதோடு ஏனைய மாற்று வழிமுறைகளையும் பயன்படுத்தலாம். சிலருக்கு சலம், மலம் வெளியேறாமல் இருக்கக்கூடிய நிலையும் காணப்படலாம். இவ்வாறானவர்களுக்கு மருத்துவ ரீதியாக சில மருந்துகளைக் கொடுக்கலாம். அதோடு பழங்கள், கீரை வகைகள் போன்ற நார்த்தன்மையான உணவுகளை உண்ணச்செய்வதன் மூலமும் இந்த பிரச்சினைக்கு தீர்வைக் காணலாம். இவற்றின் மூலம் இப்பிரச்சினையை நிவர்த்தி செய்ய முடியாவிட்டால் Urology என்ற மருத்துவத் துறையினூடாக இதற்கான தீர்வுகளைப் பெற்று கொள்ளலாம்.

அடுத்ததாக பாரிசவாதம் ஏற்பட்டு குணமடைந்து வரும் போது அந்த பகுதிகளில் நோ தன்மை இருப்பதாக பல நோயாளிகள் கூறுவார்கள். இந்த நோ தன்மையால் நோயாளிகளின் நித்திரை மற்றும் ஓய்வு என்பன பாதிக்கப்படும். இந்த நிலையைக் கவனத்தில் கொண்டு, வைத்தியரிடம் கூறி அதற்கான மருந்துகளை எடுத்துக் கொள்வது நல்லது. இதனால் நன்றாக ஓய்வெடுக்கவும் நித்திரை கொள்ளவும் முடிவதோடு நோயிலிருந்து குணமடையும் வீதமும் அதிகரிக்கும். சில சமயங்களில் இந்தப் பாரிசவாத நோயாளிகளுக்கு தசைப் பிடிப்பு அதிகமாக ஏற்படும். இதற்குச் சில மருந்துகளை எடுத்து, தசைப்பிடிப்பு ஏற்படாமல் தவிர்த்துக் கொள்ளலாம்.

இதைத்தவிர வீடுகளில் இந்நோயாளிகள் எளிதில் தமது செயற்பாடுகளை மேற்கொள்ளும் விதத்தில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். உதாரணமாக குளியலறையில் பிடித்துக் கொள்ள இலகுவாக கம்பிகளை அமைத்துக் கொடுக்கலாம்.மற்றும் வழுக்கி விழாதவாறு தரை விரிப்புக்களை பயன்படுத்தலாம். இவ்வாறு பல வசதிகளை செய்து கொடுக்கலாம். அதோடு, நடக்க, இருக்க முடியாதவர்களுக்கு அதற்கேற்ற உபகரணங்களை மற்றும் தளபாடங்களை வாங்கிக் கொடுத்து அவர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுக்கலாம். முக்கியமாக வீட்டு முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தை எழுதி, யாரும் இலகுவில் காணக்கூடிய விதத்தில் அதை நோயாளியின் சட்டைப்பையில் வைக்க வேண்டும். இதன்மூலம், நோயாளிக்கு ஏதேனும் சிக்கல் நேரிட்டால், உரிய நபருக்கு அறிவிக்கக்கூடியதாக இருக்கும். மேலும் பல தொழில்நுட்ப வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலம் இந்நோயாளிகளை இலகுவாக பராமரிக்கலாம்.



பாரிசவாதம் ஏற்பட்டவர்கள் கட்டாயமாக மதுபானம் மற்றும் புகைத்தல் என்பவற்றை முற்றாக தவிர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லை எனில் நோயின் சிக்கல் தன்மை மீண்டும் அதிகரிக்கும். நோயின் தன்மையைப் பொறுத்து இந்நோயாளிகள் வாகனம் ஓட்டுவது குறித்து தீர்மானிக்கலாம். எனினும், இவர்கள் வாகனம் ஓட்டிச் செல்லும் போது யாரேனும் ஒருவர் உதவியாக அருகில் இருப்பது சிறந்தது. நோயாளி வாகனத்தை ஓட்டிச் செல்லும் போது அவர் எவ்வாறு ஓட்டுகிறார், வீதி விதிமுறைகளைச் சரியாக கடைப்பிடிக்கிறாரா அல்லது பிழையான விதத்தில் ஓட்டுகிறாரா என்பதனைக் கவனித்து அதற்கேற்ற விதத்தில் உதவியாக இருக்க வேண்டும். பாரிசவாதம் ஏற்பட்ட நோயாளிகள், ஒரு மாதத்தின் பின்னர் தாராளமாக விமானத்தில் பயணம் செய்யலாம். ஆனால் ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு தடவை, ஐந்து நிமிடமாவது அவர் விமானத்தினுள் நடக்க வேண்டும். அமர்ந்திருக்கும் போது, கை கால்களை அசைத்தபடி இருக்க வேண்டும். அதோடு அவர் நிறைய நீர் அருந்த வேண்டும். அப்போது தான் அவர்களது இரத்தம் கட்டிபடாமல் இருக்கும். நீண்ட நேரம் பயணம் செய்வதாயின் தொடர்ச்சியாகப் பயணம் செய்யாமல், இடையில் இறங்கி ஓய்வெடுத்து மீண்டும் பயணத்தை தொடர்வது சிறந்தது.

நாம் நோயாளியைப் பற்றி மாத்திரம் சிந்திக்கிறோமே தவிர,நோயாளியைப் பராமரிப்பவரைப் பற்றி சிந்திக்கத் தவறுகிறோம். அவரும் இதனால் பல்வேறு விதத்தில் பாதிக்கப்படுகிறார். அவருக்கு அதிகமான மன அழுத்தம் காணப்படலாம். இவ்வாறான பாதிப்புகள் ஏற்படாமல் தவிர்ப்பதற்கு பல மாற்று வழிமுறைகளைப் பயன்படுத்தலாம். உதாரணமாக, வீட்டில் நோயாளியைப் பராமரிக்க தாதியர்களை ஏற்பாடு செய்யலாம். அல்லது தொடர்ச்சியாக ஒருவரே நோயாளியைப் பராமரிக்காமல் மாறி மாறி பராமரிப்பில் ஈடுபடலாம். எனவே நோயாளியின் மனநிலை எவ்வளவு முக்கியமோ, அதேபோல் நோயாளியைப் பராமரிப்பவரின் மனநிலை பற்றியும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

பேராசிரியர் அஜினி அரசலிங்கம்,
நரம்பியல் வைத்திய நிபுணர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தரணித் தமிழனின் தனிப்பெரும் திலகம்

## குமார்பொன்னம்பலம்



## 25 ஆவது ஆண்டு நினைவுதினம் இன்று

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி தமிழினத்தைப் பொறுத்தவரையில் அதிர்ச்சியாகவே இருக்கிறது. தமிழர் உரிமைக்காகக் குரல் கொடுத்த ஒருவர் என்ற ரீதியில் அவரது மறைவு தமிழர்களுக்கு அதிர்ச்சியைத் தருவதில் வியப்பில்லை.

ஒருவர் பிறந்து எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பது கேள்விக்குரியதல்ல. அவர் வாழ்ந்த காலத்தில் சாதித்தவைகள் என்ன என்பது ஆய்வுக்குரியது. அந்த வகையில் குமார்பொன்னம்பலம் தமிழ் இனத்துக்காக செய்த காரியங்கள் பல உண்டு.

தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா மறைந்த போது கலைஞர் மு.கருணாநிதி சாவே உனக்கு சாவு வந்து சேராதோ என்று கூறியது ஞாபகத்துக்கு வருகிறது. அந்த ரீதியிலேயே - குமாரின் மறைவு தமிழனத்தின் - மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அந்த வரிசையில் எதற்கும் அஞ்சாது துணிவுடன் கருத்துக்களை எடுத்துச் சொல்லக்கூடிய ஒரு அரசியல்வாதியாக தமிழராக குமார்பொன்னம்பலம் விளங்கியிருக்கிறார்.

தனிமனித விருப்பு, வெறுப்புகளின் விளைவே குமார் பொன்னம்பலத்தின் மரணம் என்பது தெட்டத் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அவர் எப்போதும் தான் சார்ந்துள்ள தமிழினத்தின் நலன் கருதியே கருத்துக் கூறிவந்திருக்கிறார்.

தமிழ் மக்களுக்கு எதிரான அரசியல் மாயவலைகள் எங்கு பின்னப்படுகிறதோ அப்போது அதை அறுத்தெறியும் துணிவைப் பெற்று அவற்றை அம்பலப்படுத்திய நிகழ்வுகள் ஏராளம்.

தமிழினத்தின் மீது அடக்குமுறை நடவடிக்கைகள் எங்கெல்லாம் இடம்பெறுகிறதோ அப்போது அவற்றை எதிர்க்கும் முதல்வராக குமார்பொன்னம்பலம் செயற்பட்டிருக்கிறார். இதன் விளைவாக அவர் அச்சுறுத்தலுக்கும் ஆளாகியிருக்கிறார். பயமுறுத்தப்பட்டிருக்கிறார்.

2000ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர்களது பாரம்பரிய ஜனநாயகக் கட்சிகளின் வரிசையில் இடையறாது ஒலித்துவந்த ஒரு ஜனநாயகக்குரல் ஓய்ந்து விட்டதாக தமிழர்கள் கருதுகிறார்கள்.பேரினவாதப் போக்குடையவர்களால் தமிழ் மக்களுக்கு எதிராக கருத்துக்கள் தெரிவிக்கப்படும் போது அதற்கு எதிராக துணிவுடன் கருத்து தெரிவிக்கும் ஆளுமையை குமார் பொன்னம் பலம் பெற்றிருந்தார்.

1977 ஆம் ஆண்டு முதலாவது தடவையாக பாராளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்ட குமார்பொன்னம்பலம் அதன் பின்னர் 1982 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டார். இதன்விளைவாக இவர் எதிர் விமர்சனங்களுக்கும் கண்டனத்துக்கும் ஆளாகிய சம்பவங்களும் உண்டு.

1938 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 12 ஆம் திகதி பிறந்த குமார் பொன்னம்பலம் இயற்கை விஞ்ஞானத்திலும் பட்டம் பெற்று, 1974 ஆம் ஆண்டு பாரிஸ்டராகப் பட்டம் பெற்றிருக்கிறார். அவர் தனது அறுபதாவது சஷ்டியப்த பூர்த்தியை தமிழ்நாடு திருக்கடையூரில் நடத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் 1944 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டது. 1966 ஆம் ஆண்டில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் வாலிபர் முன்னணியின் செயலாளராக அரசியலில் பிரவேசித்த குமார் பொன்னம்பலம் இறுதியில் அதன் செயலாளராகவும் பரிணமித்தார்.

களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்ட பல இளைஞர்களது நலனில் அக்கறை கொண்டு அவர்களுக்காக வாதிட்டும் இருக்கிறார்.

வழக்காளிகள் விடயத்தில் தனக்கென்று சில உதாரண கொள்கைகளை அவர் கடைப்பிடித்திருந்தார். எந்தவொரு வழக்காக இருந்தாலும் அதை ஆரம்பத்திலிருந்தே தானே நடத்த வேண்டும் என்ற விருப்புடையவர். இடை நடுவில் நடத்துவதை அவர் விரும்பியதில்லை.

தனது தந்தையார் அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் இதை தனக்குக் கற்றுக் கொடுத்ததாக குமார் அநேக சந்தர்ப்பத்தில் கூறியிருந்தார்.

அவர் நீதிமன்றில் தனது கட்சிக்காரருக்காக ஆஜராகி வாதாடும் போது அதைப் பார்ப்பதற்கென்றே பலரும் குழுமியிருப்பதை அவதானிக்க முடியும்.

அவரது குறுக்கு விசாரணைகள் சுவாரஸ்யம் மிக்கதாகவும் இருக்கும். இங்கு சிங்கள மொழியிலும் சரளமாக வார்த்தைப் பிரயோகங்கள் இடம்பெறுவதை அவதானிக்கலாம். நெற்றியில் விபூதி, பெரிய சந்தனத்திலகத்துடன் கொழும்பு மேல் நீதிமன்றங்களில் அவர் தனது கனிஷ்ட சட்டத்தரணிகளுடன் ஆஜராகி பல வழக்குகளில் வெற்றியீட்டியுள்ளார். அநேகஇளைஞர்களின் விடுதலைக்குக் காரணமானவர்.

கொக்கட்டிச்சோலை சம்பவம் 2000ஆம் ஆண்டு

பிற அரசியல் கட்சித் தலைவர்களைப் போன்று வார்த்தை ஜாலங்களால் அரசியல் நடத்தவில்லை. துணிவுடன் காரியங்களைச் சாதித்தவர் இவர்.

அம்பாறை மாவட்டத்தில் கொக்கட்டிச்சோலையில் 67 பொதுமக்கள் பலியான சம்பவத்தின் போது அதை விமர்சித்ததுடன் அந்த விசாரணைக்கு துணிவுடன் ஆஜராகியிருந்தவர். பிற சட்டத்தரணிகள் தயக்கம் காட்டியிருந்த போது குமார்பொன்னம்பலம் துணிவுடன் ஆஜராகியிருந்தார்.

கிருஷாந்தி குமாரசுவாமி கொலை வழக்கிலும் யாழ். பெண்கள் மனிதஉரிமைகள் சங்கத்தின் சார்பில் ஆஜராகியிருந்தார். இன்னும் இது போன்ற மனிதவுரிமைகள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் குமார்பொன்னம்பலம் ஆஜராகியிருந்ததை அவதானிக்க முடிந்தது.


தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் தன்மானம் காத்து வாழ வேண்டும் என்ற சிந்தனையை உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் ஆழமாக வலியுறுத்தி வந்தவர் குமார் பொன்னம்பல மேயாவார். இதன் காரணமாக தமிழர்கள் மத்தியில் மிக நம்பிக்கையும் செல்வாக்கும் பெற்ற வராக இவர் காணப்பட்டார். இதன் காரணமாக பேரின வாதிகளின் விமர்சனங்களுக் கும் ஆளாகினார்.

அவரது விவேகமும் அறிவாற்றலும் இக்கட்டான இச்சூழ்நிலையில் தமிழினத்துக்கு கிடைக்காமல் போனது துரதிஷ்டமானது. குமார்பொன்னம்பலம் என்ற தனி மனிதன் மறைந்தாலும் தமிழினத்தின் மத்தியில் அந்த நாமம் என்றும் மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கும்.

க.மு.தர்மராஜா

---

## நயினையின் நாயகனுக்கு எமது இதய அஞ்சலி



அமரர்.
## சின்னத்துரை ஜெகநாதன்

சமய, சமூகத் தொண்டன்

நயினாதீவு சனசமூக நிலைய (மத்தி) ஆரம்ப கால உறுப்பினரும், நிலையப் போசகரும் சமூகத் தொண்டனுமாகிய அமரர்.**சின்னத்துரை ஜெகநாதன்** அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா முருகப் பெருமானின் பாதக் கமலங்களில் நித்திய சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.


பிரிவினால் துயருறும்,
நயினாதீவு சனசமூக நிலையம் (மத்தி),
நயினாதீவு மத்திய விளையாட்டு கழகம்

---

## "மண்ணை நேசித்த மாமனிதன்"

அமரர். சின்னத்துரை ஜெகநாதன்

(சமய , சமூகத் தொண்டன்)



கனடாவில் இறைபதம் அடைந்த நயினாதீவு இரட்டங்காலி முருகன் கோவிலின் போசகரும் திருப்பணிச் சபைத் தலைவருமாகிய அமரர்.**சின்னத்துரை ஜெகநாதன்** அவர்களின் திடீர் மறைவினால் தவிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய அன்னை நாகபூஷணியினதும், இரட்டங்காலி பதியுறை முருகப்பெருமானையும் பிரார்த்தித்து நிற்கின்றோம்.


பிரிவுத்துயரில்
நயினாதீவு இரட்டங்காலி முருகன் ஆலய நிர்வாக சபையினரும், திருப்பணிச் சபையினரும்.
நயினாதீவு – 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

# என்னை யாரும் நீக்கவில்லை நானே தான் விலகினேன்

## மௌனம் கலைத்தார் ரோகித் சர்மா




சிட்னி டெஸ்ட் போட்டியில் இருந்து, என்னை யாரும் நீக்கவில்லை. பார்மில் இல்லாத காரணத்தால் நானேதான் விலகினேன் என கிரிக்கெட் வீரர் ரோகித் சர்மா விளக்கம் அளித்துள்ளார்.

சிட்னியில் இந்திய அணியின் "ட்ரெஸ்சிங் ரூமிற்கு வெளியே விரக்தியுடன் அமர்ந்திருந்த ரோகித் சர்மாவை பார்க்கவே பாவமாக இருந்தது. கடந்த ஆண்டு "ரி-20" உலகக் கோப்பையை கம்பீரமாக கையில் ஏந்திய இவருக்கு இந்த ஆண்டு துவக்கமே சரியில்லை. மோசமான "பார்ம்" காரணமாக அணியில் இருந்து கழற்றி விடப்பட்டார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான "பார்டர்-கவாஸ்கர்" டெஸ்ட் தொடர் ரோகித் சர்மாவுக்கு 37, சோதனையாக அமைந்தது. 5 இன்னிங்சில் 31 ரன் (சராசரி 6.20) தான் எடுத்தார்.

நான் எப்போது ஓய்வு பெற வேண்டும் என்பதை வெளியில் இருப்பவர்கள் முடிவு செய்ய முடியாது.

அவுஸ்திரேலிய தொடருடன் நான் ஓய்வு பெறப்போவதாக அறிவிக்கவில்லை. ஓய்வு பெறுவதை நான்தான் முடிவு செய்ய வேண்டும். நான் பல ஆண்டுகளாக விளையாடிவருகிறேன், அவர்களின் ஆதரவு கிடைத்தது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

இது ஒரு குழு விளையாட்டு. நீங்கள் அணியைப் பற்றி சிந்திக்க வேண்டும். நான் சிட்னிக்கு வந்தவுடனே வெளியில் உட்கார முடிவு செய்தேன். எனது எதிர்காலத்தை யாராலும் தீர்மானிக்க முடியாது. யாருக்கும் உரிமை இல்லை என ரோகித் சர்மா தெரிவித்தார். (நி)

# 2025 சம்பியன்ஸ் கிண்ண தொடர் பாகிஸ்தானில்




2025 ஆம் ஆண்டிற்கான சர்வதேச கிரிக்கெட் பேரவையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் பாகிஸ்தானில் ஆரம்பமாகவுள்ளது.

பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகி மார்ச் 9 ஆம் திகதி நிறைவடையும் இந்தப் போட்டி தொடரில் 8 அணிகள் பங்கு கொள்கின்றன.

போட்டிகள் பாகிஸ்தானிலும் டுபாயிலும் நடைபெறவுள்ளன.

இந்திய அணி பங்குகொள்ளும் சகல போட்டிகளும் டுபாயிலேயே நடைபெறும் என சர்வதேச கிரிக்கெட் பேரவை உறுதியளித்துள்ளது.


இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள அணிகளின் ஏ பிரிவில் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் நியூசிலாந்து அணிகள் பங்குகொள்கின்றன.

பி பிரிவில் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா, ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன.

இந்திய அணியில் தலைவரான ரோகித் சர்மாவிற்கு பதிலாக ஹர்திக் பாண்ட்யா செயற்படுவாரென தெரிவிக்கப்படுகிறது. (நி)

## இலங்கை-நியூஸிலாந்து

# ஒருநாள் போட்டிக்காக விற்றுத் தீர்ந்த நுழைவுச் சீட்டுகள்



வெலிங்டன் பேசின் ரிசர்வ் மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும் இலங்கை - நியூஸிலாந்து அணிக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டிக்கான நுழைவுச் சீட்டுகள் பெரும்பாலும் விற்றுத் தீர்ந்து விட்டன.

மைதானத்தின் மொத்த இருக்கை கொள்ளளவு வழக்கமான டெஸ்ட் போட்டிகளுக்காக 6400 ஆகும்.

எனினும் இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒருநாள் போட்டிகளுக்காக அது 6800 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இன்று வெலிங்டன் பேசின் ரிசர்வ் மைதானத்தில் தொடங்கும் ஆட்டமானது சுமார் நான்கு ஆண்டுகளின் பின்னர் நியூஸிலாந்து விளையாடும் முதல் ஒருநாள் போட்டியாகும்.

இறுதியாக 2024 மார்ச் 26 அன்று இதே மைதனாத்தில் பங்களாதேஸ்ிற்கு எதிராக நடைபெற்ற ஒருநாள் போட்டியில் நியூஸிலாந்து 164 ஓட்டங்களினால் வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 350 | 400-600 | 300 |
| உருளைக்கிழங்கு | 300 | 220 | 170 | 240 |
| பச்சைமிளகாய் | 1300 | 1000 | 1200-1400 | 1200 |
| தக்காளி | 350 | 400 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 220 | 150-200 | 200 |
| கோவா | 200 | 250 | 220 | 320 |
| கரட் | 280 | 250 | 300 | 400 |
| பூசணி | 140 | 200 | 150-170 | 200 |
| புடோல் | 180 | 150 | 250 | 200 |
| வாழைக்காய் | 130 | 100 | 100-150 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 200-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 220 | 200 | 200 |
| பாகற்காய் | 700 | 1000 | 600 | 600 |
| வெண்டக்காய் | 300 | 150 | 300 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | 130 | 200 |
| பயற்றங்காய் | 600 | 200 | 500-650 | 400 |
| லீக்ஸ் | 380 | 280 | 320 | 400 |
| பீற்றூட் | 480 | 400 | 400 | 600 |
| கறிமிளகாய் | 650 | 700 | 700 | 800 |
| முருங்கைக்காய் | -- | 1000 | -- | -- |
| போஞ்சி | 300 | 400 | 550-600 | 400 |
| கத்தரிதம்புள்ள | 280 | 300 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 200 | 80-100 | 200 |
| தேசிக்காய் | 300 | 400 | 350-450 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 150 | -- | 150-200 |
| இராசவள்ளி | 800 | 600 | 700 | 700 |
| வெங்காயப்பூ | 600 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 120 | 400 | 250 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 150 | 100 | 80 |
| வல்லாரை | 70 | 80 | 90 | 100 |
| [illegible] | 80 | 100 | -- | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தவறுகளை உணரும் போது, அதை மீண்டும் செய்யாதிருக்கவும் உறுதி எடுக்க வேண்டும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இரண்டு உயிர்களை காவுகொண்ட பாலம்

அமெரிக்காவில் நடந்த முக்கியமான வழக்கு இது. அமெரிக்க வீதியில் உள்ள பாலமொன்றின் புனரமைப்புப் பணிகள் நடந்து கொண்டிருந்தன.அது ஓர் இரவுப் பொழுது. இரண்டு கண்களும் தெரியாத நபர் ஒருவர் அவ்வீதியால் சென்று வருவது வழக்கம்.

எனினும் குறித்த பாலம் புனரமைக்கப்படுகின்ற தகவலை கண் தெரியாத அந்த நபர் அறிந்திருக்கவில்லை.

அவர் வழக்கம்போல அன்றும் அவ்வீதியால் நடந்த வந்தபோது, பாலத்துக்குள் விழுந்துவிட்டார். அவரது இரண்டு கால்களும் முறிந்துபோயின.

எனினும் அந்தப் பாலம் புனரமைக்கப்படுவதை வெளிப்படுத்தும் பொருட்டு அங்கு வெளிச்சக்கூடுகள் பொருத்தப்பட்டிருந்தன.

பாதிக்கப்பட்ட நபர் உள்ளூர் நீதிமன்றில் தனக்கு நட்டஈடு கேட்டு வழக்குத் தாக்கல் செய்தார். வழக்கை விசாரித்த நீதிமன்றம் பாலம் புனரமைக்கும் பொருட்டு வெளிச்சக் கூடுகளை சம்பந்தப்பட்ட கட்டுமான நிறுவனம் பொருத்தியுள்ளது.

எனவே பிரஸ்தாப நபருக்கு நட்டஈடு வழங்க முடியாதெனத் தீர்ப்பளித்தது.

எனினும் பாதிக்கப்பட்டவர் விடுவதாக இல்லை. அவர் அமெரிக்க மேல்நீதிமன்றத்தில் தனக்கு நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்தார்.

வழக்கை விசாரித்த மேல் நீதிமன்றம்; பாலம் புனரமைக்கும்போது இரவு வேளையில் அவ்விடத்தில் வெளிச்சக்கூடுகளைப் பொருத்துவது கட்டாயமானது. ஆனால் அந்த வெளிச்சக்கூடுகள் கண்தெரியாதவருக்கு எப்படித் தெரியும்.

ஆக, கண் தெரியாதவர்களும் பாலம் புனரமைக்கப்படுகிறது என்பதை உணர்ந்து கொள்ளக்கூடிய வகையில் குறித்த கட்டுமான நிறுவனம் சமிக்ஞை ஒலிகளைப் பொருத்தியிருக்க வேண்டும்.

அதைச் செய்திருந்தால், கண் தெரியாத பிரஸ்தாப நபர் பாலத்துக்குள் விழுந்து பாதிக்கப்படுகின்ற அவல நிலை ஏற்பட்டிருக்காது.

எனவே அவருக்கு நட்டஈடு வழங்க வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கியது.இந்த வழக்குப் பற்றி நீதிபதி (அமரர்) புலவர் மு.திருநாவுக்கரசு அவர்கள் எமக்குக் கூறியிருந்தார்.ஆக, பாலங்களைப் புனரமைக்கும்போது அதனை வெளிப்படுத்துவதை மிகத் தெளிவாகச் செய்ய வேண்டும்.

எனினும் எங்கள் அதிகாரிகள் இது விடயத்தில் கவனம் செலுத்துவதில்லை. பாலம் திருத்துகின்ற விடயம் தங்களுக்குத் தெரியும் என்பதால், அது எல்லோருக்கும் தெரியும் என்ற பிரமையே அவர்களிடம் உள்ளது.

ஆம், திருகோணமலையில் இருந்து மோட்டார் சைக்கிளில் முல்லைத்தீவுக்கு வந்த இரண்டு இளைஞர்கள் குறித்த முல்லைத் தீவுப் பாலத்தினுள் விழுந்து இறந்து போயினர்.

ஓ!பிள்ளைகளைப் பறிகொடுத்த அந்தக் குடும்பங்களின் அவலத்தை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்.

ஆக, பொறுப்பற்றவர்களின் கொடூரத்தனம் அருமந்த இரண்டு இளைஞர்களைச் சாகடித்துவிட்டது. இந்தக் குற்றத்தை இழைத்தவர்களுக்குத் தண்டனை கிடைக்குமா?

இரண்டு இளைஞர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கப்படுமா? எதுவுமே தெரியாத நிலையில், நாம் இவற்றைக் கடந்து செல்கின்றோம்.

ஆம், சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் செம்மணிப் பாலம் புனரமைக்கப்பட்டபோது, இரண்டு இளைஞர்கள் அதற்குள் விழுந்து இறந்தனர். இருந்தும் இன்னும் நம் நிர்வாகம் பட்டறிவு அடையவில்லை.

# சட்டரீதியாகவே சுண்ணக்கல் எடுத்துச் செல்லப்படுகிறது

## ‘சிற்றி’ தொழிலதிபர் பிரகதீஸ்வரன் விளக்கம்

*(யாழ்ப்பாணம்)*

யாழ்ப்பாணத்தில் இருந்து சட்ட விரோதமாக நாம் சுண்ணக் கற்களை எடுத்துச் செல்லவில்லை.

சட்டரீதியாகவே அவற்றைச் செய்கின்றோம், இவ்வாறு சிற்றி ஹாட்வெயார் நிறுவனத்தின் தொழிலதிபர் சோ.பிரகதீஸ்வரன் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரனால் சாவகச்சேரி ஏ-9 வீதியில் வைத்து, சுண்ணக் கற்களை எடுத்துச் சென்ற கனரக வாகனம் இடைமறிக்கப்பட்டு, சட்ட விரோதமாக சுண்ணக்கல் எடுத்துச் செல்வதாகக் கூறி அதனைப் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தார்.

இது தொடர்பில் விளக்கம் அளித்த போதே, சிற்றி ஹாட்வெயார் உரிமையாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த வாகனத்தில் வெள்ளைச் சல்லிகள் எடுத்துச் செல்லப்பட்டன. இவை சட்டரீதியாக யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற கிறசர் தொழிற்சாலைகளில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டவை.

குறித்த கற்களை நாங்கள் அகழ்வதில்லை. குறித்த கிறசர் தொழிற்சாலைகள் இதனைச் சட்ட ரீதியாகச் செய்கின்றன. வெள்ளைச் சல்லியை எடுத்துச் செல்வதற்கு வீதிப் பயண அனுமதி தேவையென சட்டத்தில் கூறப்படவில்லை.

எனவே, இளங்குமரன் எம்.பி.யின் மேற்போந்த நடவடிக்கைக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளோம் என்றும் தொழிலதிபர் பிரகதீஸ்வரன் தெரிவித்தார். (ந-7)

# இலங்கையில் தாக்குதல் எந்நேரமும் நடக்கலாம்

## பிரித்தானியா எச்சரிக்கை

*(கொழும்பு)*

இலங்கையில் பயங்கரவாத தாக்குதல் ஒன்றுக்கான சாத்தியம் தொடர்ந்திருப்பதாக பிரித்தானியா, அதன் பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் பிரிட்டன் பிரஜைகளுக்கு அந்தந்த நாடுகளில் நிலவும் பாதுகாப்பு மற்றும் ஆபத்தான நிலைமைகள் குறித்து பிரிட்டனின் வெளியுறவு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி நிறுவனம் அடிக்கடி பயண ஆலோசனைகளை வழங்குவது வழக்கமாகும்.

அந்த வகையில் இலங்கையில் பயங்கரவாதத் தாக்குதல் ஒன்றுக்கான சாத்தியம் இருப்பதாக கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் என்பன எச்சரிக்கை விடுத்திருந்தன.

இந்நிலையில், புத்தாண்டில் குறித்த எச்சரிக்கையை புதுப்பித்துள்ள பிரிட்டன், இலங்கையில் பயங்கரவாத தாக்குதல்களுக்கான சாத்தியம் இன்னும் தொடர்ந்திருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளது.

இம்முறை யூத அல்லது முஸ்லிம் சமூகத்தவர்களை இலக்கு வைத்தே அவ்வாறான தாக்குதல் இடம்பெறலாம் என்றும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

# வவுனியா இளைஞன் கனடாவில் உயிரிழப்பு

*(வவுனியா)*

வவுனியாவைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் கனடாவில் உயிரிழந்துள்ளார்.

வவுனியா, வீரபுரத்தைச் சேர்ந்த ஜேக்கப் நெலின் டிலக்சன் (வயது - 20 ) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் கனடாவில் வசித்துவரும் நிலையில் நேற்று முன்தினம் தனது காரில் பயணித்துள்ளார், இதன் போது கார்க் கதவினைத் திறக்க முடியாமையினால் மூச்சுத் திணறல் ஏற்பட்டு அவர் உயிரிழந்துள்ளார்.

இது குறித்து கனேடியப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,250)

# காணாமல் போனவர் சடலமாக மீட்பு

மனநலம் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் காணாமல் போனதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், அவரது துவிச்சக்கர வண்டி மற்றும் செருப்பு ஆகியன கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் முறிப்பு குளத்தில் இருந்து நேற்று மீட்கப்பட்டது.

கிளிநொச்சியைச் சேர்ந்த தங்கவேல் சிவகுமார் என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் காணாமல் போனதைத் தொடர்ந்து, நேற்று குளத்தில் மிதந்த நிலையில் அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அவரது சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, உடற்கூற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப் படவுள்ளன. (ந-7)

## பல்கலை மாணவர்களது

# இன்னல்கள் குறித்து ஆராய்ந்தார் பிரதமர்

*(கொழும்பு)*

பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அதிகாரிகளுடன் பிரதமர் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன் போது,

பல்கலைக்கழக மாணவர்களின் கல்வியைப் பாதிக்கும் அனைத்துப் பிரச்சினைகளையும் ஆராய்ந்து அவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

உயர்கல்விக்கென ஒதுக்கப்பட்ட நிதி உரியமுறையில் பயன்படுத்தப்படல் வேண்டும் எனவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய இதன் போது தெரிவித்துள்ளார். (ந-7)

# ஐக்கிய தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைமை இன்று கூடுகிறது

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைமைக்குழுக் கூட்டம் வவுனியாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் முதல் தடவையாக கூடும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைமைக் குழுவானது தேர்தல் முடிவுகள் தொடர்பில் ஆராயவுள்ளது.

அத்துடன் அடுத்தகட்டமாக எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பது என்பது குறித்தும் விரிவாகக் கலைந்துரையாடவுள்ளதோடு உள்ளூராட்சித் தேர்தலைமுகங்கொடுப்பதற்கான வியூகங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தவுள்ளது.

கூட்டணிக்குள் இளந் தலைமுறையினரை உள்வாங்குதல் மற்றும் சிரேஷ்ட தலைவர்களின் எதிர்கால அரசியல்பயணம் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் உரையாடப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றாலை, கனிய மணல் அகழ்வை உடனடியாக நிறுத்த வேண்டும்

## பிரதி அமைச்சர்–உபாலி சமரசிங்க

(மன்னார்)

மன்னார் பகுதியில் மக்களின் எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்பட்டு வருகின்ற காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு போன்றவை உடனடியாகத் தற்காலிகமாக நிறுத்தப்பட வேண்டும் என மன்னார் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதோடு குறித்த அறிவிப்பை ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க விடுத்துள்ளார்.

மன்னார் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் மன்னார் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் மன்னார் ரயில் போக்குவரத்து சேவைகள், திண்மக் கழிவு அகற்றுதலில் உள்ள சிக்கல்கள், காற்றாலை மின்சாரத் திட்டம் மற்றும் கனியவள மண்ணகழ்வு போன்ற பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இதன் போது சபையில் குழப்பம் ஏற்பட்டது. இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த காற்றாலை திட்டத்தினை விளக்குவதற்கு அத்திட்டத்தின் முகாமையாளர் முயன்ற போது கிராம மட்ட பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ அமைப்பு களின் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து பாரிய எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

எனவே இந்தத் திட்டங்களை தற்காலிகமாக நிறுத்தி வைக்க இந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த கூட்டத்தில் மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் ஏற்பாட்டில் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவின் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், றிஷாட் பதியுதீன், துரைராசா ரவிகரன், மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், செல்லத்தம்பி திலகநாதன் ஆகியோர் கலந்து கொண்டதோடு, சகல திணைக்களத் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், கிராம மட்ட பிரதிநிதிகள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள், சிவில் சமூகத் தலைவர்கள், மதத் தலைவர் கலந்து கொண்டனர். (8-285)

# பொலிஸாரின் கட்டுப்பாட்டில் இருந்த காணி விடுவிப்பு

## ஜெகதீஸ்வரன் எம்.பி நடவடிக்கை

(வவுனியா)

வவுனியா வடக்கு, கனகராயன்குளம் பகுதியில் பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த காணி ஒன்றினை விடுவிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

வவுனியா வடக்கு, கனகராயன்குளம் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு சொந்தமான காணி ஒன்று 2009 ஆண்டுக்கு பின் பொலிஸாரால் பயன்படுத்தப்பட்டு வந்தது. குறித்த காணியை விடுவிக்க அப்பகுதி மக்கள் பல தடவைகள் முயன்றும் அது பயனளிக்கவில்லை. இந் நிலையில் அண்மையில் நடைபெற்ற வவுனியா வடக்கு பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் குறித்த விடயம் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து வவுனியா மாவட்டச் செயலக அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் குறித்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டதையடுத்து வவுனியாவிற்கு திடீர் விஜயம் மேற்கொண்ட பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருடனும் பிரதி பொலிஸ்மா அதிபருடனும் இவ்விடயம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இதனையடுத்து குறித்த காணியினை உடனடியாக விடுவிக்க வன்னி பிரதி பொலிஸ்மா அதிபர் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (8-250)

# திருட்டில் ஈடுபட்ட தந்தை, மகன் கைது

## விசுவமடுவில் சம்பவம்

(வவுனியா)

புதுக்குடியிருப்பு விசுவமடுப் பகுதியில் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய தந்தை, மகன் என இருவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் புதுக்குடியிருப்பு விசுவமடு 10ஆம் கட்டைப் பகுதியில் உறவினர்களால் வீட்டுதளபாடங்கள், மோட்டார் சைக்கிள் என்பன களவாடப்பட்டிருந்தது. குறித்த திருட்டு சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளர்களால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய புதுக் குடியிருப்பு பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் குறித்த திருட்டுடன் தொடர்பு டைய சந்தேக நபர்கள் திருடிய பொருட்களுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய புன்னை நீராவி விசுவமடுவில் வசிக்கும் தந்தை (72வயது), மகன் (24 வயது) ஆகியோர்கைது செய்யப்பட்டுடன் திருடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் திருடப்பட்ட பொருட்களுடன் முற்படுத்தப்பட உள்ளனர். மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-299)

# நவீனமயப்படுத்தப்படவுள்ள பச்சிலைப்பள்ளி மைதானம்

வடக்கு மாகாண சபையின் PSDG நிதி உதவித்திட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் பொது விளையாட்டு மைதானம் நவீனமயப்படுத்தப் படவுள்ளது.

இந்நிலையில் பச்சிலைப் பள்ளி பிரதேச பொது விளையாட்டுமைதானத்தை பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை செயலாளர், கிராம அலுவலர், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர், மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது குறித்த விளையாட்டு மைதானத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் ஆராய்ந்தனர். (8-316)

# அரச காணிகள் இருக்கின்ற போதிலும் காணியற்றவர்கள் பட்டியல் இருப்பது வேதனையானது

## ஆளுநர் தெரிவிப்பு



(கண்டாவளை)

யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்த வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களிலும் அரச காணிகள் இருக்கத்தக்கதாக காணிகள் அற்றவர்கள் பட்டியல் இருக்கின்றமை வேதனையானது. அதனைத் தீர்ப்பதற்கு முழுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தியுள்ளார்.

பிரமாண அடிப்படையிலான கொடையின் கீழ் 85 மில்லியன் ரூபாய் செலவில், வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி நகரில் புதிதாக அமைக்கப்பட்டு வடக்கு மாகாண ஆளுநரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அன்றைய காலத்தில் கிளிநொச்சி மக்களது காணி ஆவணங்கள் அனைத்தையும் பத்திரமாக ஏற்றிச் செல்வதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டு இறுதி நேரத்தில் அனுமதிமறுக்கப்பட்டதையும் குறிப்பிட்ட அவர், போர் முடிவடைந்த பின்னர் மீண்டும் வந்து பார்த்தபோது அவை எரிந்து சாம்பலாகியிருந்ததைக் கண்டதாகவும் தெரிவித்தார். அந்த ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டிருந்தால் பல காணிப் பிரச்சினைகளுக்கு இலகுவாக தீர்வைக் கண்டிருக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.


காணி அனுமதிகள் ஏழை மக்களுக்கு மறுக்கப்படுகின்றன என்றும் வசதிபடைத்தோர் வசமே காணிகள் செல்வதாகவும் குறிப்பிட்ட ஆளுநர் இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

மேலும் இடமாற்றங்கள் வழங்கப்படும்போதுதான் பல அரச உத்தியோகத்தர்களுக்கு நோய் நிலைமை இருக்கின்றதே தெரியவருகின்றது என்றும், அவர்கள்தான் தங்கள் பெற்றோர்களைப் பார்த்துக் கொள்கின்றார்கள் என்பதும் அப் போதுதான் தெரியவருகின்றது எனவும் குறிப்பிட்ட ஆளுநர் இடமாற்றங்களை நிறுத்துவதற்காக இவ்வாறு அரச அதிகாரிகள் தெரிவிக்கக்கூடாது என்றும் குறிப்பிட்டார்.

இலங்கையிலுள்ள 9 மாகாணங்களில் வடக்கு மாகாணத்தில் 5 மாவட்டங்களுக்கு இடையில் சீரான பரம்பல் இல்லை என்பதைக் குறிப்பிட்ட ஆளுநர் அதன் காரணமாக யாழ். மாவட்டத்திலிருந்து ஏனைய மாவட்டங்களில் பணியாற்றுவது கட்டாயம் எனவும் அவர் தெரிவித்தார். (8-315)



அறிவியல் மாற்றம் சமூக மேம்பாட்டு நிறுவனத்தினால் கடந்த டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட திரையிசைப் பாடல் போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சு.திசாங்கன் இறுதிப் போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.



உலக வங்கி மற்றும் ஐரோப்பியன் யூனியன் நிதி மற்றும் சபைநிதி ஒதுக்கீட்டின்கீழ் பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்தினூடாக 65.30 மில்லியன் ரூபா செலவில் பளை நகரத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கடைத்தொகுதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

(படம்–தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழிலுள்ள...

துரித விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர்.

மேலும் சி.சி.ரி.வி உதவியுடன் தாக்குதல்தாரிகளை அடையாளம் காண நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொதுமக்கள் இதுகுறித்த தகவல்கள் கிடைத்தால் உடனடியாகத் தமக்கு அறியத் தருமாறும் யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)

## வடக்கில்...

யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி நேற்று வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகனுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதற்குச் சமாந்தரமாக கிழக்கு மாகாண ஆளுநரை ரஷ்யாவின் இலங்கைக்கான தூதுவர் சந்தித்து தமது ஆதரவை வெளிப்படுத்தினார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இந்தியத் துணைத் தூதுவர் சிறி சாய் முரளிக்கும் இடையிலான சிநேகபூர்வமான சந்திப்பு நேற்றுக் காலை ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது இந்திய அரசாங்கத்தால் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட மற்றும் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களுக்கு வடக்கு மக்கள் சார்பில் ஆளுநர் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

புதிய ஆண்டில் இந்திய அரசாங்கத்திடமிருந்து எவ்வாறான உதவிகள் தேவை என்பது தொடர்பில் இந்திய துணைத் தூதுவர் ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகர மற்றும் இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் Levan S. Dzhagaryan ஆகியோருக்கு இடையிலான சிநேகபூர்வ சந்திப்பு திருகோணமலை ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்துடன் நெருக்க மாகச் செயற்பட்டு நாட்டின் அபிவிருத்திக்கு அதிகபட்ச ஆதரவை வழங்குவதாகவும் ரஷ்யத் தூதுவர் தெரிவித்தார்.

இலங்கைக்கான மனிதாபிமான உதவியின் கீழ் ரஷ்ய கூட்டமைப்பிடம் இருந்து பெறப்பட்ட உரத்திற்கு தாம் மிகவும் நன்றிக் கடன்படுவதாக ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (ந-7)

## தாண்டவமாடு...

சிக்குரிய செய்தியாகும்.

இந்தச் சிகிச்சைக்காக இந்தியாவுக்குச் சென்றால் ஒரு கோடியே 50 இலட்சம் வரை செலவாகும். தேவையேற்படின் இதனை தம்மால் நிரவகித்துச் செல்ல முடியும் என்று இராணுவம் தெரிவித்துள்ளது. அரசாங்கம் எந்தளவு பெருமை பேசிக் கொண்டிருந்தாலும் கிராம மட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் இன்னும் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது.

சிறுநீர்ப் பரிசோதனையைக் கூட தனியார் மருந்தகங்களிலேயே எடுக்க வேண்டியுள்ளது. 5000க்கும் மேற்பட்ட இதய நோயாளர்கள் சத்திர சிகிச்சைகளில் பங்கேற்க முடியாத நிலைமையில் இருக்கின்றனர். 2026ஆம் ஆண்டு வரை மருந்துத் தட்டுப்பாடு நிலவும் என்று துறைசார் நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். இதனால் சில தனியார் நன்கொடையாளர்கள் தாமாக முன்வந்து சில உதவிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றனர். மருந்துத் தட்டுப்பாட்டுக்கு அப்பால் வைத்தியசாலைகளில் மேலும் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. இவ்வாறான நிலைமையிலேயே தற்போதைய சுகாதார அமைச்சர் எமக்குப் பணம் தேவையில்லை, அளவுக்கு அதிகமாகவே சுகாதார அமைச்சுக்கு நிதி ஒதுக்கப்படுவதாகக் குறிப்பிடுகின்றார்.

ஆனால் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் தற்போது நிவாரணங்களை வழங்கக்கூடியளவுக்கு அரசாங்கத்தின் நிதி நிலைமை இல்லை எனக்கூறுகின்றார். இருவரில் யார் கூறுவது உண்மை எனத் தெரியவில்லை. சுகாதார அமைச்சரது மமதைப் பேச்சுக்களால் மக்களுக்குக் கிடைக்க விருக்கும் நன்மைகளையும் இழக்க வேண்டியேற்படும் என்றார். (ந-7)

## நாட்டில்...

குறித்த நபர் உயிரிழந்தார்.

சம்பவத்தில் காயமடைந்த 29 வயதுடைய மற்றுமொருவர் வலான மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மாத்தறை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அவர்கள் இருவரும் கப்பரதொட்ட பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை சிறைச்சாலையில் மரக்கிளை முறிந்து விழுந்ததில் உயிரிழந்த கைதியின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு வீடு திரும்பிய தரப்பினர் மீது நேற்று அதிகாலை இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 3 பேர் உயிர் தப்பியதுடன் துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ந-7)

## தமிழ்த்...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தற்போதைய சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபடாமல் தமிழர்களுக்கு வரலாறு இல்லை எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டுத்தான் ஆக வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை எனவும், அதனை இலக்காகக் கொண்ட முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை இதுகுறித்து முதலில் தமது கட்சிக்குள் கலந்துரையாடித் தீர்மானிக்க வேண்டியிருப்பதாகச் சுட்டிக்காட்டிய அவர், அதனைத் தொடர்ந்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்து தமிழ்த் தேசியக் கட்சிகள் கொள்கை ரீதியில் பொது நிலைப்பாடு ஒன்றுக்கு வரவேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

எது எவ்வாறிருப்பினும், தற்போதைய சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபடாமல் தமிழர்களுக்கு வரலாறு இல்லை எனவும் சிறீதரன் எம்.பி கூறினார். (ந-7)

## அரிசி...

என அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அரிசி இறக்குமதிக்காக வழங்கப்பட்ட கால அவகாசம் எதிர்வரும் 10ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ந-7)

## மின்சார...

சதவீதத்திலேனும் குறைக்க வேண்டும். செல்வந்தத் தரப்பினரின் 35 பில்லியன் ரூபாய் மின்கட்டணம் நிலுவையில் உள்ள நிலையில் மின்கட்டணத்தை அதிகரித்து நடுத்தர மக்களைப் பழிவாங்குவது முறையற்ற தொரு செயற்பாடாகும் எனத் தேசிய மக்களவை அமைப்பின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார். (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.01.04
சீட்டிழுப்பு இலக்கம் 5706
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 7 5 1 7 2 5
அத சம்பத W 1 7 2 5
சீட்டிழுப்பு இலக்கம் 281
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி 2025.01.04
சீட்டிழுப்பு இலக்கம் 1736
H 02 31 34 45 H
Double Chance 80782

மெகா பவர்
திகதி 04/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2054
Z 23 23 37 54 72

லக்கி 7 VIP
திகதி 2025.01.04
சீட்டிழுப்பு இலக்கம் 532
Z 7 0 7 0 7 4 Z

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3948
சீட்டிழுப்பு திகதி 04.01.2025
Y 02 41 58 74
Y
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.01.04
சீட்டிழுப்பு இலக்கம் 1015
மேடம் 41 44 47 62 மேடம்
08760 50

உத்தியோகபூர்வ முடிவுகள்
04.01.2025 வெற்றி வாரம் 414
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கம் 8 5 4 6 3 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,501,949.20
67799
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2680
சீட்டிழுப்பு திகதி 2025.01.04 தினம் சனிக்கிழமை
05 59 72 73 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.77,933,348.00

சனிதா
திகதி 04.01.2025 வெற்றி வாரம் 4841
14 18 25 65 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,735,462.00
53124

சசிரி
வெற்றி வாரம் 593
சீட்டிழுப்பு திகதி 04.01.2025 சனிக்கிழமை
08 20 29
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4392
சீட்டிழுப்பு திகதி 04.01.2025 தினம் சனிக்கிழமை
04 14 32 59
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,936,789.60
12076

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 28 18 45 51 59
1856
04.01.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.560,796,525.40

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2506
சீட்டிழுப்பு திகதி: 2025.01.04
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,966,530.40
02 14 28 59 S
645968

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி, கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய் ஆகிய பகுதிகளில் வீடு ஒன்று வாடகைக்குத் தேவை.

(2906)

தொடர்புகளுக்கு :

**077 919 1529**

## V2 VISA SERVICES
## கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All counties
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1955)

## வீடு விற்பனைக்கு

வத்தளையில் 10 பேர்ச் காணியில் அமைந்துள்ள இரண்டு மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

(509)

மேலதிக விபரங்களுக்கு

**076 726 9418**

## கல்வி சேவை

சுன்னாகம் K.K.S. வீதியில் அமைந்திருக்கும் கல்வி நிறுவனம் ஒன்றில் சகல வசதிகளையும் கொண்ட வகுப்பறைகள் உள்ளன. பெரிய / சிறிய குழு வகுப்புக்களுக்கு மிகவும் உகந்தது.

(2932)

விபரங்களுக்கு :

**070 686 7695 / 076 897 6665**

## விற்பனைக்கு

Fancy கடை ஒன்றிற்குரிய பொருட்கள் விற்பனைக்குண்டு.

- A/C
- கண்ணாடித் தட்டுகள்
- CupBoard
- Cash Counter

(C-1946)

தொடர்புகளுக்கு : **076 444 9377**

## அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான
## றோயல் நெய்

Royal

உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை தரமான றோயல் நெய் கொண்டு தயாரித்த அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்

(C-1947)



ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.

குறிப்பு :- யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க் கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்

Marketed By :-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2222 567

Packed By:-
Royal Industries®

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள PPT எனும் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

01. முகாமையாளர்
02. காசாளர்
03. அலுவலக உதவியாளர்
04. பேருந்து நடத்துனர்

(2925)

**077 386 6250, 077 573 1318**

## தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல Fancy Shop ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை

- காசாளர்
- விற்பனைப் பிரதிநிதி

(C-1946)

தொடர்புகளுக்கு : **076 444 9377**

## கடை வாடகைக்கு தேவை

மோட்டார் சைக்கிள் Show room போடுவதற்கு யாழ். நகரை அண்டிய பகுதிகளில் கடை ஒன்று வாடகைக்குத் தேவை.

(2906)

தொடர்புகளுக்கு :

**077 919 1529**

## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

### தேசிய தொழில்த்தகைமை (NVQ) சான்றிதழ் பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோரல் - 2025

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நெறிகள். க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்தும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோர் தேசிய தொழிற் தகைமை மூலம் பட்டதாரி ஆகும் வாய்ப்பு.

**Field Assistant Agriculture (விவசாய உதவியாளர் பயிற்சிநெறிகள்)**

1. தேசிய தொழில் தகைமை மட்டம் 3 (4 மாத காலப்பயிற்சி நெறி) தகைமை க.பொ.த சாதாரண தரம் கற்றிருப்புதுடன் 16-24 வயதிற்குட்பட்டவராக இருத்தல்.
2. தேசிய தொழில் தகைமை மட்டம் 4 (6 மாத காலப்பயிற்சி நெறி) தகைமை - NVQ மட்டம் 3 அல்லது க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்திருப்பதுடன் மேலதிகமாக விவசாய பாடத்திலும் சித்தியடைந்திருப்பதுடன் 16 - 24 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பம் கோரல்**

**Diploma in Agricultural Production technology (NVQ 5 and 6)**

**ஆங்கிலமொழி மூலம் / English medium**

**பயிற்சி நெறிக்காலம்**

ஒன்று / இரண்டு வருடங்கள் (ஆறுமாதம் / ஒரு வருட கால தொழிற்பயிற்சியுடன்)

**அனுமதி பெறுவதற்கான தகைமைகள்:**

க.பொ.த(சாதாரண) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக மொத்தமாக ஆறு (06) பாடங்களில் சித்தியடையந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

க.பொ.த (உத) பரீட்சையில் உயிரியல் / தொழில்நுட்பவியல் / ஏதேனும் ஒரு பாடத்துறையில் கல்வி பயின்று விவசாயப்பாடத்தினை கற்று அப்பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

தேசிய தொழில்சார் தகைமை (NVQ Level - 04)

ஆங்கில மொழி அறிவு (க.பொ.த (சா.த) / சமமான ஏற்றுக் கொள்ளக்கூடிய தகைமை)

**வயது எல்லை**

விண்ணப்பதாரிகள் 17 வயது தொடக்கம் 25 வயது வரை

தங்களின் சுயவிபரக் கோவையுடன் அனைத்து விண்ணப்பங்களையும் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகவோ 20.01.2025 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**விண்ணப்பங்களை அனுப்புவதற்கு/ மேலதிக தகவல்களுக்கு :**

அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம்,
சுண்ணாகம்.

தொலைபேசி : 021 224 1420
மின்னஞ்சல் : jcinstituteofagriculture@gmail.com

(C-1936)

## பகுதி வீடு வாடகைக்கு

இணுவில் கே.கே.எஸ் வீதியில் வீட்டின் முன் பகுதி வாடகைக்கு உண்டு. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

(2905)

**077 492 5974**

## லொத்தர் ரிக்கட் விற்பனைக்கு ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு :

**077 122 8841**

**NLB, KKS ROAD, JAFFNA.**

(2919)

## காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் வடமராட்சி உடுப்பிட்டியில் 30 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- உடுப்பிட்டி சன்னதி கோயில் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- நல்ல சூழல், நன்னீரூற்று, நிலப்பரப்பு
- பொக்கன் சந்திக்கு அருகாமையில் உடுப்பிட்டி வாசிக சாலை சந்தி 300 மீற்றர் தூரம்
- சன்னதி முருகன் கோயில் 2 கிலோமீற்றர் கெருடாவில் கந்தசாமி கோயில் 200 மீற்றர் தூரம்
- வழி இலக்கம் 751 மற்றும் 767 அரச, தனியார் பேருந்து செல்லும் பிரதான காபற் வீதி
- பார்வையிடும் நேரம் : காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை

(2918)

தொடர்புகளுக்கு:

**070 290 2338, 076 017 1105**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 237/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 275/= | Max 3Kg |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 415/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 160/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 255/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 237/= | |
| 1Kg சம்பா(உள்நாடு) | - 240/= | |
| 1Kg கீரி சம்பா | - 259/= | |
| 1Kg வெள்ளை உளுந்து | - 780/= | |
| 1Kg பயறு | - 580/= | |
| 10Kg விஜிதா அரிசி | - 2710/= | |
| 1Kg கடலை | - 490/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 660/= | |
| 1L Vimal தே. எண்ணெய் | - 800/= | ~~860/=~~ |
| 180mL சிக் சம்போ | - 390/= | ~~480/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 48/= | ~~80/=~~ |




வடமராட்சி, தென்மராட்சி சில்லறைக் கடைகளுக்கு டெலிவரிகள் மற்றும் கொள்வனவுகளிற்கு 076 - 800 6500 இன் மூலமாக தொடர்பு கொள்ளவும்.

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு
Facebook:- happy basket.lk
இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(511)

Happy Supermarket
0777 8080 30

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல. ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org